

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 147 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 21 – சனிக்கிழமை 06 ஜனவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 147 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 21 - Saturday 06 January 2024 - Chennai 12 Pages ₹ 5.00






## தமிழ்நாடு
## உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024

ஜனவரி 7, 2024 – காலை 10:00 மணி | சென்னை வர்த்தக மையம்

தொடங்கி வைப்பவர்

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

முன்னிலை

**திரு. பியூஷ் கோயல் அவர்கள்**

மாண்புமிகு ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை, நுகர்வோர் நலன்,
உணவு மற்றும் பொதுவிநியோகம், ஜவுளித்துறை அமைச்சர்

### தொழில் நிறை தமிழ்நாடு

1வது – இந்தியாவில் அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலம்

1வது – மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதி

1வது – மோட்டார் - மோட்டார் வாகன பாகங்களின் ஏற்றுமதி

2வது – இந்தியாவின் மிகப் பெரிய மாநிலப் பொருளாதாரம்

43% – தொழிற்சாலை பெண் பணியாளர்களைக் கொண்டது (மொத்த இந்திய பணியாளர்களில்)

70% – மொத்த இந்தியா இரு சக்கர மின்சார வாகனங்கள் உற்பத்தி

### மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகள்

- முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- தொழில் கொள்கைகள் அறிமுகம்
- தொடக்க விழாக்கள்
- தொழில் கருத்தரங்குகள்
- வணிக ஈடுபாடுகள்
- கண்காட்சிகள்

செ.ம.தொ.இ/7/வரைகலை/2024

www.tngim2024.com

Follow us on:

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 06-01-2024

# வளர்ச்சியின் வடிவம் கிளாம்பாக்கம்

வளர்ச்சியின் வடிவமாக இருக்கும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தின்மீது அவதூறு பரப்பி தனது வக்ர அரசியலை வெளிப்படுத்தி இருக்கிறார் ஒன்றிய அமைச்சர் எல்.முருகன்.

**அழகானதும் - ஆக்கபூர்வமானதும் - பிரமாண்டமானதும் - பிரமிக்க வைக்கத் தக்கதுமான கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தைப் பார்த்து பொதுமக்கள் அனைவரும் மலைத்துப் போய் நிற்கிறார்கள். சென்னையில் பன்னோக்கு மருத்துவமனையையும், மதுரையில் மாபெரும் நூலகத்தையும் அமைத்த மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் அமைத்துள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், காலாகாலத்துக்கும் கோடிக்கணக்கான மக்களுக்குப் பயனளிக்கும் பேருந்து நிலையமாக அமையப் போகிறது; பொதுமக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

சென்னை பாரிமுனையில் நெரிசல் மிகுந்த பகுதியில் இருந்த பேருந்து நிலையத்தை மாற்றி - கோயம்பேட்டில் மாபெரும் பேருந்து நிலையம் அமைக்கத் திட்டமிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இதனையே மாதிரியாகக் கொண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை உருவாக்கத் திட்டமிட்டார்கள். ஆனாலும் வேகமாக பணிகளைச் செய்யவுமில்லை, முழுமையான நிதியை ஒதுக்கவுமில்லை.

**கழக ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகுதான் முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகளை விரைவுபடுத்தினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவரான பி.கே.சேகர்பாபு, இதனை தனிக் கவனம் செலுத்தி உருவாக்கிக் காட்டி இருக்கிறார்.**

393.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பில் கிளாம்பாக்கத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' அமைக்கப்பட்டுள்ளது. இதில் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளியூர் செல்ல வசதியாக 215 பேருந்துகளை ஒரே நேரத்தில் நிறுத்தலாம். இரு சக்கர, நான்கு சக்கர பேருந்து நிலையம் அமைக்க இரண்டடுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேருந்து முனையத்தில் நகரும் படிக்கட்டுகள், மின் தூக்கிகள் உள்ளன. நாள்தோறும் சுத்தம் செய்ய இயந்திரத் துடைப்பான்கள் உள்ளன. குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. உணவகங்கள், மருத்துவமனை, இலவச மருத்துவ மையங்கள், கழிவறைகள், குழந்தைகளுக்குப் பாலூட்டிட அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் பயணச் சீட்டு வாங்க குறைந்தளவு உயரம் கொண்ட பயணச் சீட்டு பெறுமிடங்கள் இருக்கின்றன. அவர்களுக்காக சக்கர நாற்காலிகள், தனிக் கழிவறைகள் இருக்கின்றன. திருநங்கையர்க்கு தனி கழிவறை வசதி உள்ளது. பயணிகள் தங்குவதற்காக ஓய்வறைகள் இருக்கின்றன. 100 ஆண்கள், 40 பெண்கள், 340 ஓட்டுநர்கள் தங்க ஓய்வறைகள் உள்ளன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் உள்ளேயே உள்ளது.

சென்னைக்குள் இருந்து கிளாம்பாக்கம் வர உள்ளூர் பேருந்துகளை நிறுத்த 7 ஏக்கர் பரப்பளவில் 60 பேருந்துகளை நிறுத்தும் வசதியுடன் மாநகரப் பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே வந்து இறங்கி, வெளியூர் பேருந்துகளைப் பிடிக்க பயணிகள் செல்வதற்காக சுரங்கப் பாதையுடன் கூடிய மின் தூக்கி சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. பேருந்து நிலையம் அருகே ரயில் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 16 ஏக்கர் பரப்பில் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. பேருந்து நிலையத்தில் இருந்து 7 கி.மீட்டர் தூரத்தில் புதிய ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு வசதிகளோடுதான் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைத் திறந்து வைத்துள்ளார்.

**பரந்து விரிந்துவரும் சென்னையின் வசதிக்கு ஏற்ப இது அமைக்கப்பட்டுள்ளது. தலைநகரை நோக்கி வரும் தமிழ்நாட்டு மக்களின் தேவைக்கு ஏற்ப இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தைப் பார்த்தவர்கள் பாராட்டி வருகிறார்கள். பயன்படுத்தியவர்கள் போற்றி வருகிறார்கள். இதுதான் ஒன்றிய அமைச்சர் முருகனுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது.**

**2015ஆம் ஆண்டு முதல் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை என்று சொல்லி, வாயால் வடை சுட்டு வரும் கூட்டத்துக்கு மருத்துவமனையை, நூலகத்தை, பேருந்து நிலையத்தை மூன்றாண்டு காலத்துக்குள் மளமளவென எழுப்பும் முதலமைச்சரைப் பார்த்தால் பொறாமை வரத்தானே செய்யும்? அதனைத்தான் அறிக்கையாக விடுத்துள்ளார், ஒன்றிய அமைச்சர் முருகன்.**

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டதுதான் இந்தப் பேருந்து நிலையம் என்பதை தி.மு.க. அரசு மறைக்கவில்லை. 'நாங்கள்தான் திட்டமிட்டோம்' என்று சொல்லிக் கொள்ளவும் இல்லை. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் 90 சதவிகிதப் பணிகள் முடிந்து விட்டதாக ஒன்றிய அமைச்சர் முருகன் சொல்வது, பச்சைப் பொய் ஆகும். 2013 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி திட்டமிட்டது. 2021ஆம் ஆண்டு அந்தக் கட்சியின் ஆட்சி முடிந்தது. 9 ஆண்டுகளாக என்ன செய்தார்கள்? 2013ஆம் ஆண்டு அறிவித்த அ.தி.மு.க. அரசு, 2018ஆம் ஆண்டு தான் ஒப்பந்தம் கோரியது. 2019ஆம் ஆண்டுதான் பணிகளைத் துவக்கியது. 2021 தி.மு.க. ஆட்சிக்கு வரும் வரை 30 விழுக்காடு பணிகள்தான் முடிந்திருந்தன. அமைச்சர் முருகன் சொன்னதைப் போல, 90 விழுக்காடு பணிகள் முடிந்திருந்தால் அன்றைய முதலமைச்சர் பழனிசாமியே திறந்து வைத்திருப்பாரே!

கழிவறைக் கூடத்திலும், சுடுகாட்டுக்குள்ளும் அம்மா மருத்துவ மனையை அவசர கதியில் திறந்து கணக்குக் காட்டியவராச்சே பழனிசாமி. அவரா 90 விழுக்காடு முடிந்த பேருந்து நிலையத்தை விட்டு வைப்பார்?

**'நாடாளுமன்றத் தேர்தலுக்காக உடனடியாகத் திறந்து விட்டார்கள்' என்கிறார் அமைச்சர். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக மதுரையில் ஒரு செங்கலை வைத்துவிட்டுப் போனார் பிரதமர் நரேந்திர மோடி. 2024 தேர்தல் வரப் போகிறது. செங்கல் களிமண்ணாச்சே தவிர, கட்டடம் ஆகவில்லை என்பதை மதுரைக்குப் போய் மாண்புமிகு முருகன் பார்க்க வேண்டும். "வெறும், 'பாரத் மாதாகீ ஜே'வை வைத்து நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்ய முடியாது" என்பதை முருகன்கள் உணர வேண்டும்.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில் நேற்று (5.1.2024) 6 பயனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் புதியதாக கட்டப்பட்டுள்ள மூலகொத்தளம் திட்டப்பகுதியில் குடியிருப்பிற்கான ஒதுக்கீடு ஆணைகளையும், 1 பயனாளிக்கு பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் குடியிருப்பிற்கான ஒதுக்கீடு ஆணைகளையும் வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு. பிரபாகர், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜே.ஜே.எபினேசர், ஆகியோர் உள்ளனர்.

ஒன்றிய நிதி அமைச்சரின் பேச்சுக்கு விரிவான பதில் தந்திருக்கிறார் தமிழ்நாட்டு நிதி அமைச்சர்!

# ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களுக்காகச் செய்தது என்ன?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, ஜன.6-

ஒன்றிய நிதி அமைச்சரின் பேச்சுக்கு விரிவான பதிலை தமிழ்நாட்டு நிதி அமைச்சர் தந்திருக்கிறார் என்றும் இந்திய மாநிலங்களின் நலன் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ள ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களுக்காக செய்தது என்ன? என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1000 ரொக்கமும் வழங்கி இந்த இடர் மிகு சூழலிலும் இல்லந்தோறும் இன்பம் பொங்கிடத் துணை நிற்கிறது நமது " திராவிட மாடல்" அரசு.**

**ஆட்சி அமைந்தது முதல்,**

**மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் அளவுக்கு செலவில் மிச்சம்,**

**காலை உணவுத் திட்டம் மூலம் பணிச்சுமைக் குறைப்பு,**

**புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக மாதம் 1000 ரூபாய்,**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதம் 1000 ரூபாய்**

**எனப் பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசின் நிதியினைக் கொண்டு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது திராவிடமாடல் அரசு.**

**இந்திய மாநிலங்களின் நலன் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ள ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களுக்காகச் செய்தது என்ன?**

**ஒன்றிய நிதியமைச்சரின் பேச்சுக்கு விரிவான பதில் தந்திருக்கிறார் தமிழ்நாட்டின் நிதியமைச்சர்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை துவக்கி வைக்க வருகை தரும்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*சென்னை, ஜன.6-*

*நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை காலை நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை துவக்கி வைக்க வருகைத் தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கண்டோன்மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை மற்றும் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் அருகில் 2 இடங்களில் நாளை காலை 9.000 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும் இவ்விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அணி திரண்டு பங்கேற்க வேண்டும் என்றும் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்*



*2030ம் ஆண்டுக்குள் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் டாலர்களாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார். தமிழ் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வதற்காகவும், தமிழக இளைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காகவும், புதிய முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு முதலீட்டாளர்களுக்கும் முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.*

*இந்நிலையில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கின் ஒரு பகுதியாக வருகிற 7 மற்றும் 8ம் தேதிகளில் நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது.*

*இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் துவக்க விழா நாளை 7ம் தேதி காலை 9.30 மணியளவில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை துவக்கி வைக்கிறார்.*

*இவ்விழாவிற்கு வருகைத் தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் மற்றும் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் ஆகிய 2 இடங்களில் நாளை காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.*

*இவ்விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக் கணக்கில் அணி திரண்டு மேளதாளம் பேண்டு வாத்தியம் முழங்க எழுச்சியான முறையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.*

நாளை 7ந்தேதி நடைபெறுகிறது

# மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

*மதுரை, ஜன.6*

*மதுரை வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் நாளை ஏழாம் தேதி நடைபெறுகிறது. இதில் பல்வேறு கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப் பட உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு :-*

*மதுரை வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் நாளை 07.01.2024 -ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணி அளவில் மதுரை திருப்பாலை யாதவா பெண்கள் கல்லூரி அருகில் உள்ள குறிஞ்சி திருமண மஹாலில் மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம் பால சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் கழக ஆக்கப் பணிகள் குறித்தும், தமிழர்களின் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு குறித்தும் பல்வேறு ஆலோசனைகள் மேற்கொள்ளப் பட உள்ளதால் இக்கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சருமான பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலத்தில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் வகையில் சின்ன நொளம்பூரில் ரூ.42.71 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் உயர் மட்ட பாலம் அமைக்கும் பணியினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் நேற்று (05.01.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் கா.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் ஏ.ஸ்டாலின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழர் திருநாளை சிறப்பாகக் கொண்டாடிட

# பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவிலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் 258 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவிலும், பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 78 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலும் முடிவுற்ற திட்டப் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் 278 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 2 புதிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 6-**

**"தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடிட பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும்" - என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

தமிழர்களின் அடையாளமாக அனைத்துத் தரப்பு மக்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் பெருமைமிகு ஒரு பண்டிகை பொங்கல் திருநாளாகும். இந்த நன்னாள் அனைத்துத் தொழில்களுக்கும், ஏன், மனித குலத்திற்கே அடித்தளமாய் விளங்கி, உணவளித்து வரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாகவும் தமிழர்களாகிய அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நன்னாளை முன்னிட்டு, 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும் என்று கடந்த 2.1.2024 அன்று தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

### இலவச வேட்டி சேலைகள்

மேலும், முன்கூட்டியே திட்டமிட்டு உற்பத்தி செய்த காரணத்தினால், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டிசேலைகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து, இவற்றை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், பொங்கல் திருநாளைச் சிறப்பாக மக்கள் கொண்டாடிட, ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து, **ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1,000 ரூபாய் பொங்கல் பரிசாக நியாயவிலைக் கடைகளில் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக ரொக்கமாக வழங்கப்படும்** என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மகளிர் உரிமைத் தொகை

மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி வழங்கப்பட்டு வரும் **கலைஞர் மகளிர் உரிமைத் தொகையினை, இந்த மாதம் பொங்கல் திருநாளுக்கு முன்னதாக, அதாவது, வரும் 10 ஆம் தேதியன்றே, மகளிர் உரிமைத் தொகை பெற்றுவரும் 1 கோடியே 15 இலட்சம் மகளிரின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும்** என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

### நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு

# மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறது!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றச்சாட்டு!

**சென்னை, ஜன. 6-**

நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறது என்றும், தமிழ்நாடு ரூபாய் 1 கொடுத்தால் ஒன்றிய அரசு 29 பைசா மட்டுமே தருகிறார்கள் என்றும் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பேட்டி வருமாறு:-

நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் உண்மைக்குப் புறம்பான தகவல்களை தந்திருக்கிறார்.

2 பேரிடர்களை சந்தித்துள்ள தமிழ்நாட்டிற்கு, ஒன்றிய அரசு எந்த உதவியும் செய்யவில்லை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசுதான் நிவாரண உதவிகளை வழங்கியது.

'தமிழகத்தின் வட மற்றும் தென் மாவட்டங்கள் சமீபத்தில் இயற்கை பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்டன. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு தமிழக



அரசு 6,000 ரூபாய் நிவாரணம் வழங்கியுள்ளது.

ஆட்சிக்கு வந்தபோது கடும் நிதி நெருக்கடியிலும் கொரோனா நிவாரணமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 வழங்கப்பட்டது. மகளிருக்கு கட்டணமில்லா பயணம் உள்ளிட்ட பயன்தரும் பல திட்டங்களை தி.மு.க. அரசு நிறைவேற்றியது. ஒருபோதும் திமுக அரசால் செய்யமுடியாது என கூறப்பட்ட மகளிர் உதவித்தொகை திட்டத்தில் ரூ.1.15 கோடி மகளிர் மாதந்தோறும் ரூ.1,000 பெறுகின்றனர். நிதி நெருக்கடிக்கு இடையே மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றோம்.

தற்போது பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.1,000 வழங்கப்பட உள்ளது. கடுமையான நிதி நெருக்கடியை தமிழக அரசு சிறப்பாக கையாள்கிறது. ஒன்றிய அரசு இதுவரை தமிழகத்திற்கு ரூ.4.75 லட்சம் கோடி மட்டுமே கொடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசு நிதி பகிர்வாக வழங்கும் ஒரு ரூபாயில் 29 பைசாவை மட்டும்தான் ஒன்றிய அரசு திரும்ப அளிக்கிறது. தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய உரிய நிதிகள் ஒன்றிய அரசிடம் இருந்து கிடைப்பதில்லை. தமிழ்நாட்டில் இருந்து நேரடி வரி வருவாயாக ரூ.6.23 லட்சம் கோடி அளவிற்கு ஒன்றிய அரசு வசூலித்துள்ளது.

நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு பாரபட்சம் செய்கிறது. தமிழ்நாட்டிற்கு வரி பகிர்வு மிக குறைவாகவே உள்ளது. மக்கள்தொகை அடிப்படையிலும் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு நியாயமான நிதியை வழங்கவில்லை.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அதிக நிதியை ஒதுக்குகிறது. மறைமுக வருவாய் குறித்து ஒன்றிய அரசு எதுவும் தெரிவிக்கவில்லை. கர்நாடகா, உத்தரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழக மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு குறைவாகதான் நிதி ஒதுக்கியுள்ளது. நடப்பாண்டில் தமிழ்நாட்டில் நடக்கும் மெட்ரோ ரெயில் 2ம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அரசு போதிய நிதி ஒதுக்கவில்லை. கிராமப்புற வீடு வழங்கும் திட்டத்திற்கு ஒன்றிய அரசு கொடுக்கும் நிதியை விட மாநில அரசு அதிக நிதி கொடுக்கிறது. தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ஒத்துழைப்பு வழங்காதது வருத்தத்தை அளிக்கிறது. வெள்ளப்பாதிப்புக்கு ஒன்றிய அரசு உடனடியாக நிவாரண நிதி வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று (05.01.2024) சென்னை தலைமை செயலகத்திலிருந்து திறந்து வைக்கப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சிட்டீஸ் திட்டத்தின்கீழ், அடையார் மண்டலம், வார்டு 170, ரூ.6.79 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட சென்னை தொடக்க/உயர்நிலைப்பள்ளி மற்றும் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பள்ளி வளாகம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கோட்டூரிலிருந்து பங்கேற்று பள்ளி வளாகத்தினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) திருமதி.சரண்யா அரி, மண்டலக்குழுத்தலைவர் துரைராஜ், 170வது வார்டு உறுப்பினர் கதிர் முருகன், தலைமை ஆசிரியர்/கூடுதல் கல்வி அலுவலர் திருமதி.மகேஸ்வரி கல்பனா, செயற்பொறியாளர் திரு.புருஷோத்தம்மன் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### சென்னையில் 7, 8 தேதிகளில் 'உலக முதலீட்டாளர்கள் மாநாடு'

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை! ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்பு!

**சென்னை, ஜன.6 -**

**சென்னையில் நாளையும் - நாளை மறுநாளும் (7 மற்றும் 8-ஆம் தேதிகளில்) நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 7 மற்றும் 8ம் தேதிகளில் உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

அதன்படி, வரும் 7ஆம் தேதி காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாநாடு தொடங்குகிறது. தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை ஆற்றுகிறார். அதன்பின், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

ஒன்றிய தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றுகிறார்.


இந்த மாநாட்டில் தொழில்கள் அடிப்படையிலான பல்வேறு தனித்தனி அமர்வுகள் நடத்தப்படுகின்றன. ஜவுளி, காலணி தொழில்கள், மின்சார வாகனங்கள், வேளாண் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு அமர்வுகள் 2 நாட்களும் நடத்தப்பட உள்ளன.

உலக முதலீட்டாளர் மாநாட்டின் தொடக்க விழாவை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஒளிபரப்ப மாவட்ட ஆட்சியர்கள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் இரண்டாம் நாளான ஜனவரி 8ஆம் தேதி பல்வேறு நாடுகளின் தொழில்நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளன.

சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி மையம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து அன்று மாலை 4.30 மணிக்கு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஆற்றுகிறார்.





செங்கல்பட்டு மாவட்டம், வெண்பாக்கத்தில் சுமார் 12 ஏக்கர் நிலப் பரப்பளவில் ரூ.97 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டிடம் கட்டுவதற்கான பணியை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் க. அன்புச்செல்வன், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், ஒன்றியச் செயலாளர் சந்தானம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நகர மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன், நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

### வளசரவாக்கம் மண்டலம் சின்னநொளம்பூரில்

# ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் உயர்மட்ட மேம்பாலப் பணி!

### கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு - அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு!

சென்னை, ஜன.6-

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் வகையில் சின்ன நொளம்பூரில் ரூ.42.71 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணியினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் நேற்று (05.01.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, 2022-23-ஆம் ஆண்டிற்கான சட்ட மன்ற மானியக் கோரிக்கையில் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட வளசரவாக்கம் மண்டலத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே யூனியன் சாலையையும் பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கும் வகையில் 2 உயர்மட்டப் பாலங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ், வளசரவாக்கம் மண்டலம், வார்டு 143 மற்றும் 144க்குட்பட்ட கூவம் ஆற்றின் குறுக்கே பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து, யூனியன் சாலையை சிரமமின்றி அடைவதற்கு ஏதுவாக, நான்கு வழிப் பாதையாக சின்ன நொளம்பூரில் 245 மீ. நீளம் மற்றும் 20.70 மீ. அகலத்தில் ரூ.42.71 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைப் பார்வையிட்டு ஆய்வு செய்த நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் இப்பாலப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், சன்னதி முதல் குறுக்குத் தெருவில் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து யூனியன் சாலையில் இணைக்கும் வகையில் ரூ.31.65 கோடி மதிப்பீட்டில் இரண்டு வழிப்பாதையில் அமையும் பாலப் பணிகளைத் தொடங்கி விரைவில் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுரவாயிலிருந்து அடையாளம்பட்டு செல்லும் பகுதியில் உள்ள கூவம் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைத்துறையின் சேதமடைந்த தரைப்பாலத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பாலப்பணிகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர். பிரியா, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் கா.கணபதி, துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ்.சமீரன், மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் ஏ.ஸ்டாலின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் நகரில் அ.தி.மு.க. நபர் ஆக்கிரமித்திருந்த

# ரூ.50 கோடி மதிப்புள்ள நிலம் மீட்பு!

### வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. முயற்சிக்கு பொதுமக்கள் பாராட்டு!

திருவள்ளூர், ஜன.6

திருவள்ளூர் நகரில் அ.தி.மு.க. நபரால் ஆக்கிரமிக்கப்பட்ட ரூ. 50 கோடி அரசு நிலம் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் முயற்சியால் நிலம் மீட்கப்பட்டது.

திருவள்ளூர் நகரின் பிரதான சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள அரசு நிலத்தினை முறைகேடாக கடந்த 31 ஆண்டுகளாக அ.தி.மு.க.வை சேர்ந்த ஞானகுமார் என்பவர் கையகப்படுத்தி மிதி வண்டி காப்பகம் நடத்தி வந்ததை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சி தலைவர் முனைவர். பிரபு சங்கர் அவர்களிடத்திலும், மாவட்ட வருவாய் அலுவலர் இராஜ்குமார் இடத்திலும் புகார் அளித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இன்று வட்டாட்சியர் சுரேஷ், வருவாய் ஆய்வாளர் வெங்கடேசன், நகராட்சி ஆணையர் பி. வி.சுரேந்திரஷா, நகராட்சி பொறியாளர் நடராஜன், சுகாதார அலுவலர் கோவிந்தராஜ், உதவி பொறியாளர் சரவணன், பணி மேற்பார்வையாளர் குணசேகரன், வருவாய்த் துறை மற்றும் நகராட்சி துறை அலுவலக பணியாளர்கள் ஆகியோர் இணைந்து ஜே.சி.பி இயந்திரம் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றி ரூபாய் 50 கோடி மதிப்பிலான அரசு நிலம் 50 சென்ட் மீட்கப்பட்டது.

மேலும் திருவள்ளூர் ராஜாஜி சாலையில் பல ஆண்டுகளாக நெருக்கடியில் இயங்கி வரும் நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவ , மாணவியர்கள் அனைவரின் நலன் கருதி இவ்விடத்தில் புதியதாக மேல்நிலைப்பள்ளி கட்டடம் அமைய உரிய நடவடிக்கை மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினரின் செயலுக்கு சமூக ஆர்வலர்கள், நகர பொதுமக்கள், பெற்றோர்கள் தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை முருகையன்

### சனவரி 6 (2003)



திருவண்ணாமலையில் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். தொடக்கக் காலத்திலிருந்து கழக உறுப்பினராக இருந்தவர்.

வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

மூன்று முறை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். 1980ல் திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ஓய்வூதியதாரர்கள் – குடும்ப ஓய்வூதியதாரர்கள் –

# அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை!

### அதிகபட்சமாக ரூபாய் 3000 வரை பெறுவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

2022-2023ஆம் ஆண்டிற்கான 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கான மிகை ஊதியம் 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு :

மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களுக்கு, அச்சாணியாக விளங்கும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு எதிர்வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி,

**1. 'சி' மற்றும் 'டி' பிரிவைச்** (C & D Group) **சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.**

**2. தொகுப்பூதியம், சிறப்புக் கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள், மற்றும் 2022–2023ம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்.**

**3. "சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கும் ரூபாய் 500 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.**

மேற்கூறிய மிகை ஊதியம்/பொங்கல் பரிசு வழங்குவதன் மூலம் அரசிற்கு 167 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு தேர்வுப் போட்டிகள் - 2023!

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அறிவிப்பு!

சென்னை, ஜன 6-

ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் 17 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டிற்கு 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022ஆம் ஆண்டிற்கு மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் 19.01.2024 முதல் 31.01.2024 வரை தமிழ்நாட்டில் நடத்தப்பட உள்ளது. அதற்கான தேர்வுப் போட்டிகள் கீழ்காணும் வகையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு: தடகளம், நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள் (ஆண்கள்): 1) 1500 மீ ஓட்டம், 2) 2000 மீ Steeplechase & 3) குண்டு எறிதல் (5Kg), தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், திருவண்ணாமலை, தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 08.01.2024, காலை 8 மணி அளவில்

**விதிமுறைகள்:**

பங்கு பெறும் வீரர்கள் 01.01.2005 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்.

பங்கு பெறும் வீரர்கள் கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் இரண்டு சான்றிதழ்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆதார் அடையாள அட்டை (அல்லது) பாஸ்போர்ட், பிறப்பு சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 01.01.2023 அன்றோ அல்லது அதற்கு முன் நகராட்சி/கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கப்பட்டது),

பள்ளி சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்.

பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்படாது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 47வது சென்னைப் புத்தகக் காட்சி

# "கலைஞர் கருவூலம்"

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

**47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள "கலைஞர் கருவூலம்" விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.197 லட்சம் மதிப்பீட்டில் திருவள்ளூர் நகரம் வார்டு எண் 14 – ஜெயின் நகரில் நூலகம் மற்றும் அறிவு சார் மைய புதிய கட்டட திறப்பு விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தலைமை செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.அதனை தொடர்ந்து நூலகத்தை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு அங்கு சிறப்பு பயிற்சி மேற்கொண்ட நகரின் பல்வேறு பள்ளி மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் எழுதுகோல் வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார். உடன் நகர கழக செயலாளரும், நகராட்சி துணைத் தலைவருமான சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், நகராட்சி ஆணையர் பி.வி.சுரேந்திரஷா, நகராட்சி பொறியாளர் நடராஜன், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.மகாலிங்கம், சுகாதார அலுவலர் கோவிந்தராஜன், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சங்க பொதுச் செயலாளர் தாஸ் , உதவி பொறியாளர் சரவணன், மேற்பார்வை பொறியாளர் குமரேசன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி .எஸ்.நேதாஜி, சி.சு.விஜயகுமார், க.மதுசூதனன், ஜெய் கிருஷ்ணா., நகர கழக நிர்வாகிகள் ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஸ்வரிகைலாசம், காஞ்சிபாடி பி.சரவணன், அணிகளின் நிர்வாகிகள் ஜி.பாண்டியன், ஜே.சி.பி.என்.கேசவன், பா.ராஜி, நகர் மன்ற உறுப்பினர்கள் பி.அருணா ஜெய் கிருஷ்ணா, த.அயூப் அலி, தனலட்சுமி சீனிவாசன், இரா.விஜயகுமார், பத்மாவதி ஸ்ரீதர், விஜயலட்சுமி கண்ணன், ஹேமலதா நரேஷ் மற்றும் ஒப்பந்ததாரர் ரவி, என்.பாஸ்கரன், வேணுகோபால், நிர்மல் குமார், கழக தோழர்கள், நகராட்சி பல்துறை அலுவலர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், நூலக ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் – உதகை நகராட்சி, 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமான கே.ஏ.முஸ்தபா மற்றும் கீழ்குந்தா பேரூராட்சி, 9வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.பாபு ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 05.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



'மை தருமபுரி அமைப்பு' சார்பில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் இருந்து நாள்தோறும் உணவு வழங்கி சேவையாற்றி வந்தனர்.உணவு சேவை தொடர்ந்து 999 நாள் கடந்து 1000மாவது நாளையொட்டி தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உணவு வழங்கி தொடங்கி வைத்தார். உடன் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, துணை தலைவர் நித்யா அன்பழகன், மை தருமபுரி அமைப்பினர் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## குழாய் இணைக்கும் பணி!

### குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை,ஜன.6–

மண்டலம்9 (தேனாம்பேட்டை) வடக்கு மைலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து அடையாறு கழிவுநீர் உந்துநிலையத்திற்கு உந்துகுழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 06.01.2024 இன்று மதியம் 12 மணி முதல் 07.01.2024 அன்று மதியம் 12 மணி வரை வடக்கு மைலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையம் செயல்படாது.

எனவே, மண்டலம்9 (தேனாம்பேட்டை)க்குட்பட்ட கோபாலபுரம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை எற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில் மக்களின் கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் ஆவடி மாநகராட்சி சத்தியமூர்த்தி நகர் வார்டு 6,7,25,32 ல் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது.இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முகாமை துவக்கி வைத்து பொதுமக்களின் கோரிக்கைகளின் மனுக்களை பெற்று விரைவில் நடவடிக்கை எடுக்க அதிகாரியிடம் கூறினார்.உடன் மாநகர மேயர் உதயகுமார், மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், ராஜேந்திரன்,மண்டல தலைவர் அமுதா பேபி சேகர், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், நாராயனபிரசாத் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாலா சன் பிரகாஷ், பைரவி ஜான்,ஜெயப்ரியா சரவணன், சுதாகரன் வட்ட செயலாளர்கள் பே. டிசோசா, ராஜேந்திரன், என்.கிருஷ்ணகுமார் மற்றும் மாநகராட்சி, மின்வாரியம், வருவாய் துறை, சுகாதார துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.

### அமைச்சரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியாது!

# செந்தில் பாலாஜி அமைச்சராகத் தொடர தடை இல்லை!

### உச்ச நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜன. 6-

செந்தில்பாலாஜி அமைச்சராக தொடர தடையில்லை என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், செந்தில் பாலாஜியின் அமைச்சர் பதவியை நீக்கக் கோரிய வழக்கையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கக் கோரிய மனுவை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே தள்ளுபடி செய்திருந்தது.

இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் அபய் ஒக்கா, உஜ்ஜால் பூயான் ஆகியோர் அடங்கிய அமர்வு, முதலமைச்சரின் பரிந்துரை இல்லாமல் ஒரு அமைச்சரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியாது. ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தெரிவித்தது. சென்னை உயர்நீதிமன்றம் சரியான முறையில்தான் தீர்ப்பு வழங்கி இருக்கிறது எனவே இந்த விவகாரத்தில் தலையிடத் தேவையில்லை என கூறி மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடிசெய்து உச்சநீதிமன்ற நீதிபதி கள் உத்தரவிட்டுள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வார்டு, புல்லா அவென்யூவில் உள்ள மகளிர் மேல்நிலைப்பள்ளி மறு சீரமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு திருக்கோயில்கள் சார்பில்

# சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு 10 இலட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு அனுப்பி வைத்தார்!

*சென்னை, ஜன. 6-*

*தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலிருந்து சபரிமலைக்கு ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் ஐயப்ப பக்தர்கள் மாலையணிந்து, விரதம் மேற்கொண்டு இருமுடி கட்டி புனித யாத்திரையாக சென்று வருகின்றனர். அப்பக்தர்களுக்கு வழங்கிடும் வகையில் தமிழ்நாட்டு திருக்கோயில்கள் சார்பில் ஏற்கனவே 6 இலட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள்திருவிதாங்கூர் தேவசம் போர்டு அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் 10 இலட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் கண்டெய்னர் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கும் பணிகளை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த பிஸ்கட் பாக்கெட்டுகளை ஐயப்ப பக்தர்களுக்கு வழங்கிடும் வகையில் சபரிமலை தேவஸ்தான அலுவலர்களிடம் வரும் ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்கப்படும்.*

*பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

*திருவிதாங்கூர் தேவஸ்தானம், சபரிமலை ஐயப்பன் கோயிலின் செயலாளர் அவர்கள், வரலாறு காணாத அளவிற்கு சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து இருக்கின்ற நிலையில் மணிக்கணக்கில் சுவாமி தரிசனம் செய்வதற்கு நீண்ட நேரம் வரிசையில் நிற்க வேண்டிய சூழலில் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பிஸ்கட் பாக்கெட்டுகள் ஏற்பாடு செய்துதர கோரிக்கை வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு ஏற்கனவே 6 இலட்சம் பிரிட்டானியா பிஸ்கட் பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற திருக்கோயில்கள் சார்பில் ரூ.40 லட்சம் மதிப்பிலான 10 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள் 4 கண்டெய்னர் வாகனங்களில் சபரிமலைக்கு அனுப்புகின்ற நிகழ்ச்சியை தொடங்கி வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறோம். சபரிமலை தேவஸ்தானம் வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்த இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் துறையின் அமைச்சர் என்ற வகையில் என்னுடைய மகிழ்ச்சியும் நன்றியையும் பகிர்ந்து கொள்கிறேன்.*

*சபரிமலையை பொறுத்தளவில் ஒரு மணி நேரத்திற்கு 3,500 பக்தர்கள் தான் தரிசனம் செய்யக்கூடிய சூழல் உள்ளது. ஒரு நாளைக்கு சுமார் 18 மணி நேரம் சுவாமி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சுமார் 70 ஆயிரம் பக்தர்கள் வருகின்ற சூழலில் சபரிமலையில் திருவிதாங்கூர் தேவஸ்தான போர்டும், காவல்துறையும் இணைந்து சிறந்த முறையில் கூட்ட நெரிசல் இல்லாமல் பக்தர்களுக்கு தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அதிகளவில் பக்தர்கள் வருகின்ற போது அவர்களுக்கு தரிசனத்தை ஏற்பாடு செய்வதற்கு சிரமம் ஏற்படுகின்றது. அதோடு மட்டுமல்லாமல் மாலையில் தரிசனத்திற்கு செல்பவர்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் நெய் அபிஷேகத்திற்காக இரவு தங்கி விடுகிறார்கள். அந்த பக்தர்களின் எண்ணிக்கையும் தரிசனத்திற்கு செல்லுகின்ற எண்ணிக்கையும் கணக்கிடும் போது ஒரு லட்சத்தை தாண்டுகிறது. ஆகவே பக்தர்கள் தரிசனம் செய்வதில் சற்று சிரமம் ஏற்படுகிறது. இருந்தாலும் கேரள அரசு சாதுரியமாக திட்டமிட்டு முடிந்த அளவிற்கு பல்வேறு வசதிகளையும், பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்வதற்கும் தொடர்ந்து ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் பக்தர்கள் அதிகமான நேரத்திற்கு வரிசையில் நிற்பதால் தான் தற்போது இது போன்ற உதவிகளை பக்கத்து மாநிலமாக இருக்கின்ற நாம் சகோதரத்துவத்தோடும், நட்புணர்வோடும் நம்முடைய பக்தர்களும் அதிக அளவில் செல்கின்ற படியால் இது போன்ற உதவிகளை செய்து வருகிறோம். சபரிமலையில் திருவிதாங்கூர் தேவஸ்தானம் இன்னும் கூடுதலாக திட்டமிட்டு பக்தர்களுக்கு வேண்டிய அனைத்து தேவைகளையும் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.*

*திருமழிசை அருகே உள்ள குத்தம்பாக்கம் பேருந்து முனையத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொள்வோம். எங்களுடைய இலக்கு இந்தாண்டு இறுதிக்குள் திறக்க வேண்டும் என்பதுதான். அங்கு குளிர்சாதன வசதி செய்கின்ற பணிகள் தற்போது கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளது. மேலும், கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் கிடைத்த அனுபவத்தை கொண்டு, குத்தம்பாக்கம் முனையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்ற போது பயணிகளுக்கு தேவையான பல்வேறு கட்டமைப்பு வசதிகளையும் ஆலோசித்து, தனியார் ஆலோசனைகளையும் பெற்று சிறந்த முறையில் குத்தம்பாக்கம் பேருந்து நிலையத்தை இயக்க திட்டமிட்டு இருக்கின்றோம். இந்தாண்டு இறுதிக்குள் தொடங்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேலும் விரைவுப் படுத்துவோம் என்று தெரிவித்தார்.*

### கோவை தெற்கு மாவட்டம்

# ஆனைமலை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், ஆனைமலை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் பி.கன்னிமுத்து அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு. **எஸ்.எஸ்.யுவராஜ்** (எண்.3/54, மெயின் ரோடு, சுப்பேகவுண்டன்புதூர், ஆனைமலை, கோவை மாவட்டம்-642 103.) அவர்கள் ஆனைமலை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 05.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1ல் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் முகாம் 4-1-2024 அன்று பம்மலில் உள்ள எல். சி. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முகாமில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கலந்து கொண்டு பொது மக்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்து திட்டங்களின் பயன்பாடுகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அப்பொழுது துணை மேயர் கோ. காமராஜ் மண்டல தலைவர் வே.கருணாநிதி, பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், மாநகராட்சி சுகாதாரக்குழு தலைவர் இரா. நரேஷ் கண்ணா, உதவி ஆணையர் மாரிசெல்வி, வட்டாட்சியர் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் ஆரணி பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகளுக்கு பொங்கல் பரிசுகளை பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ரோஸ் பொன்னையன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளரும் கும்முப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், மு.மணிபாலன், ஆரணி.பி.முத்து, கு.கரிகாலன், எம்.ஆர்.ஸ்ரீதர் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் துளசிராமன், டி.ஜெ.ஜி.தமிழரசன், என்.கிருஷ்ணமூர்த்தி, கலையரசி, நிலவழகன், கோபிநாத், நெசவாளர் அணி ஜெயக்குமார், உதயகுமார், மருத்துவ அணி பாலமுருகன், ரகுமான்கான், ரவி. நீலகண்டன், கௌசல்யா தினேஷ் ஜி.ரமேஷ், சுல்தான், நாகராஜ், பிரபாகர், சாய் சதயன், பாஸ்கர், பாலாஜி, மாடசாமி, முஸ்தபா உமர், நவின்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 07.05.1956

மறைவு : 06.01.2023

# த.சின்னதுரை M.A.,

முன்னாள் செயலாளர், 75 ( அ ) வட்ட தி.மு.க,
திரு.வி.க.நகர் தெற்கு பகுதி, வடசென்னை கிழக்கு மாவட்டம்

என்றும் நீங்காத நினைவுகளுடன் ...

அன்பு **மனைவி** மற்றும் **குடும்பத்தினர்**


கலைஞர் 100
1924 - 2023
நாள்: 06.01.2024
சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: YMCA மைதானம்,
ராயப்பேட்டை
சேப்பாக்கம் பகுதி தி.மு.க சார்பில்
வாக்குச்சாவடி
பாக முகவர்களுக்கு (BLA 2) (BLA C)
ஆலோசனை வழங்கி
நலத்திட்ட உதவிகள்
வழங்க வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை
இளம்தலைவர்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
திரு. தயாநிதி மாறன் MP, திரு. மு.க.தமிழரசு, திரு. நே.சிற்றரசு MC
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர்
பணிகள் குழு தலைவர் - பெருநகர சென்னை மாநகராட்சி
அன்புடன்
எஸ்.மதன்மோகன் MC
சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர்
9வது மண்டல குழு தலைவர், பெருநகர சென்னை மாநகராட்சி
சேப்பாக்கம் பகுதி தி.மு.க - சென்னை மேற்கு மாவட்டம்

## ரூ.278.97 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் - 121 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

# நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.1933 கோடியில் திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 121 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன. 6–

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.1933.69 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.278.97 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப் படவுள்ள 2 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 121 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவிலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் 258 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவிலும், பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 78 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலும் முடிவுற்ற திட்டப் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் 278 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 2 புதிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் 121 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ரூ.1335.86 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்!**

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 759 ஊரக குடியிருப்புகளுக்கு 182 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியத்தைச் சார்ந்த நல்லாத்தூர், என்.என். கண்டிகை மற்றும் பூனிமாங்காடு ஊராட்சிகளில் உள்ள நல்லாத்தூர் மற்றும் 15 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த 134 ஊரக குடியிருப்புகளுக்கு 91 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக்குடிநீர் திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரக குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர் மற்றும் வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கு 117 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 756 ஊரக குடியிருப்புகளுக்கு 440 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டு குடிநீர் திட்டம்;

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரக குடியிருப்புகளுக்கு 412 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரக குடியிருப்புகளுக்கு 87 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளிப்பத்து ஊராட்சியில் உள்ள 4 ஊரக குடியிருப்புகளுக்கு 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டம்;

என மொத்தம் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 9.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் ரூ.204.36 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்!**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கத்தை சார்ந்த இந்திரா நகர், மேக்ரோ மார்வெல், சஹாஜ் என்கிளேவ், சேது லட்சுமி நகர், சத்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 3.33 மில்லியன் லிட்டர் கழிவு நீர் வெளியேற்றும் வகையில் 22 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான பாதாளச் சாக்கடை திட்டம்;

மாதவரத்தைச் சார்ந்த லட்சுமிபுரம், மாதவரம் பூஸ்டர், மாதவரம் பேருந்து நிலையம், கூட்டுறவு நகர் ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 27 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கிடும் வகையில் 44 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்;

நெற்குன்றம் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், கங்கையம்மன் கோயில் தெரு பகுதிக்கு நாளொன்றுக்கு 3.1 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றும் வகையில் 26 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான பாதாள சாக்கடைத் திட்டம்;

நெற்குன்றத்தை சேர்ந்த ஏ.வி.கே. நகர் மற்றும் ஸ்ரீ லட்சுமி நகர் பகுதிகளுக்கு 11 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்;

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கண்ணன் காலனியில் நாளொன்றுக்கு 5 மில்லியன் லிட்டர் கழிவு நீர் வெளியேற்றும் வகையில் 10 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 MLD திறன் கொண்ட கழிவுநீரகற்று நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்;

அண்ணாநகர் மண்டலம், வில்லிவாக்கம் ‘B’ கழிவுநீர் உந்துநிலையம் முதல் வில்லிவாக்கம் தடாகம் கழிவுநீர் உந்துநிலையம் வரை உள்ள 300 மி.மீ. விட்டமுள்ள வார்ப்பிரும்பு உந்துகுழாய்களை நாளொன்றுக்கு 3.50 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றும் வகையில் 5 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 450 மி.மீ. விட்டமுள்ள வார்ப்பிரும்பு கழிவு நீர் உந்துகுழாய்களாக விரிவாக்கம் செய்யும் பணி;

இராமாபுரத்தைச் சார்ந்த பாரதி சாலை, அம்மன் நகர் ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 10.35 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றும் வகையில் 32 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான பாதாளச் சாக்கடை திட்டம்;

இராமாபுரத்தைச் சார்ந்த பணிமனை 154 மற்றும் 155 பகுதிகளுக்கு நாளொன்றிற்கு 26.58 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கும் வகையில் 52 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள விரிவான குடிநீர் வழங்கும் திட்டம்;

என மொத்தம் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 5.04 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் முடிவுற்ற குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் ரூ.258.11 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்!**

மாநகராட்சி பகுதிகளான ஆவடி, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி – குதுப்பாபள்ளம் மற்றும் பாலக்கரை, தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காஞ்சிபுரம், கரூர், திண்டுக்கல், சேலம், ஓசூர், நாகர்கோயில், தாம்பரம் – குரோம்பேட்டை மற்றும் சேலையூர், திருநெல்வேலி, ஈரோடு மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் 52 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 20 அறிவுசார் மையங்கள்;

நகராட்சி பகுதிகளான செங்கல்பட்டு, திருவள்ளூர், குன்றத்தூர், திருக்கோவிலூர், நாமக்கல், குமாரபாளையம், தருமபுரி, பொள்ளாச்சி, உதகமண்டலம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மணப்பாறை, பெரம்பலூர், இராமநாதபுரம், சங்கரன்கோவில், கொல்லங்கோடு, விருதுநகர், அருப்புக்கோட்டை, அரியலூர், கள்ளக்குறிச்சி, கோவில்பட்டி, மேட்டுப்பாளையம், நாகப்பட்டினம், இராணிப்பேட்டை, தேனி – அல்லிநகரம், திருவண்ணாமலை, திருமங்கலம், விழுப்புரம், திருச்செங்கோடு, திருவத்திபுரம், திருவாரூர், திருப்பத்தூர், திண்டிவனம், பழனி, துறையூர், காரைக்குடி, கொடைக்கானல், பட்டுக்கோட்டை, தாரமங்கலம், திருவில்லிபுத்தூர், உளுந்தூர்பேட்டை, அரக்கோணம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் 76 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 43 அறிவுசார் மையங்கள்;

சிதம்பரத்தில் 48 இலட்சம் ரூபாய் செலவில் நூலகக் கட்டடம், கோயம்புத்தூரில் 3 கோடி ரூபாய் செலவில் அனுபவ மையம், தூத்துக்குடியில் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கற்றல் மையம்; திருப்பூரில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநகராட்சி மண்டல அலுவலகக் கட்டடம்; திருப்பூர் மாவட்டம் – பல்லடத்தில் 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

நாமக்கல் மாவட்டம் – பள்ளிப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை, சிவகாசி, தென்காசி, காஞ்சிபுரம், திருப்பூர் மாவட்டம் – பல்லடம், திருப்பூர் – மொராஜிதேசாய் நகர், தியாகி பழனிசாமி நகர், முருகம்பாளையம், தோட்டத்துப்பாளையம், பூலுவப்பட்டி, மண்ணரை, லட்சுமி நகர், மங்கலம் சாலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை, துறையூர், தேனி மாவட்டம் – பெரியகுளம், சின்னமனூர், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, தூத்துக்குடி சிதம்பரம் நகர், லூர்தாம்பாள்புரம், பாத்திமா நகர், சில்வர்புரம், பண்டாரம்பட்டி, நாகர்கோயில் – வடிவீஸ்வரம், தொல்லவிலை, வட்டவிலை, கிருஷ்ணன் கோவில், வடசேரி, ஆகிய இடங்களில் 14 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 நகர்ப்புற சுகாதார நல மையங்கள், 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 3 ஆய்வகக் கட்டடங்கள்;

வேலூர் மாவட்டம்பேரணாம்பட்டு, நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு, தேனி மாவட்டம் – கம்பம், திருப்பூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 4 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 பூங்காக்கள்;

நாமக்கல் மாவட்டம் – நாமக்கல் மற்றும் ராசிபுரம், ஈரோடு மாவட்டம் – புஞ்சை புளியம்பட்டி, திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி, தேனி மாவட்டம் – கம்பம் ஆகிய இடங்களில் 22 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 5 சந்தைகள்;

திருப்பூரில் 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம்; கோயம்புத்தூரில் 40 கோடி ரூபாய் செலவில் குறிச்சி ஏரிக்கரை புதுப்பிக்கும் பணி; காஞ்சிபுரம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வீடற்றவர்களுக்கான 2 தங்குமிடங்கள்;

சேலம் – அயன் திருமாளிகை தொடக்கப் பள்ளி மற்றும் சின்ன திருப்பதி நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள்; புதுக்கோட்டை மாவட்டம் – அறந்தாங்கியில் சூரியமூர்த்தி குளம் மற்றும் கோபால சமுத்திரம், கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி, சேலம் – கொல்லன்பட்டறை ஆகிய இடங்களில் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 பொது கழிப்பிடங்கள்; சேலத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் பஞ்சந்தாங்கி ஏரியில் 30 இலட்சம் ரூபாய் செலவில் கால்வாய் கட்டும் பணி; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூரில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நோயாளிகளின் உதவியாளர்களுக்கான தங்குமிடம்;

என மொத்தம் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் 258 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 125 பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் ரூ.56.94 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்!**

இராணிப்பேட்டை மாவட்டம் – நெமிலி, சேலம் மாவட்டம் – காடையாம்பட்டி, ஈரோடு மாவட்டம் – அந்தியூர், ஈரோடு மாவட்டம் – சிவகிரி, நம்பியூர், நசியனூர், திருப்பூர் மாவட்டம் – முத்தூர், குன்னத்தூர், ஊத்துக்குளி, மூலனூர் ஆகிய பேரூராட்சிகளில் 29 கோடியே 23 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 10 வாரச்சந்தைகள்;

சேலம் மாவட்டம் – கொளத்தூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் – கமுதி ஆகிய பேரூராட்சிகளில் 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வாரச்சந்தைகள்;

நீலகிரி மாவட்டம் – தேவர்சோலா மற்றும் நடுவட்டம், மதுரை மாவட்டம் – சோழவந்தான் ஆகிய பேரூராட்சிகளில் 8 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 3 பேருந்து நிலையங்கள்; கன்னியாகுமரி மாவட்டம் – புத்தளம் பேரூராட்சியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம்; ஈரோடு மாவட்டம் – கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு தங்குமிடம்;

காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர், திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர், நாமக்கல் மாவட்டம் – மோகனூர், பட்டணம், ஈரோடு மாவட்டம் – பெருந்துறை, மதுரை மாவட்டம் – அலங்காநல்லூர், சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூர், தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் ஆகிய பேரூராட்சிகளில் 12 கோடியே 69 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 8 அறிவுசார் மையங்கள்;

என மொத்தம் பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலான 25 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.78.42 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்!**

**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் – காமராஜர் நகர், திரு.வி.க. நகர் மண்டலம் – சி.எஸ். நகர், அம்பத்தூர் மண்டலம் – வரதராஜபுரம் ஆகிய இடங்களில் 13 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்;

**பூங்காக்கள்**

மாதவரம் மண்டலம் – ரங்கா அவென்யூ, சீனிவாச நகர் 2வது தெரு, ஜெய் மாருதி நகர் (கிழக்கு), ஸ்ரீ பாலாஜி நகர், வி.எஸ். மணி நகர் (தெற்கு), வி.எஸ். மணி நகர் (வடக்கு), இராயபுரம் மண்டலம் – மின்ட் மேம்பாலம் கீழ் பேசின் பாலம் சாலை, அண்ணா நகர் மண்டலம் – அண்ணா நகர் உள்வட்ட சாலை, வளசரவாக்கம் மண்டலம் – நொளம்பூர் 2வது பிரதான சாலை, எம்.எம்.டி.ஏ. காலனி 7வது பிளாக் பிரதான சாலை, கங்கா நகர் 3வது பிரதான சாலை, டி.என்.எச்.பி. OSR, டி.என்.எச்.பி. OSR 2, காமராஜர் நகர் 5வது பிளாக், வி.ஜி.என். நகர், பிருந்தாவன் நகர் 5வது தெரு, அருள்மிகு மீனாட்சி அம்மன் நகர், தமிழ் நகர், சோழிங்கநல்லூர் மண்டலம் – எம்.ஜி.ஆர். சாலை RMZ Phase1 ஆகிய இடங்களில் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 20 பூங்காக்கள்;

**விளையாட்டு திடல்கள்**

வளசரவாக்கம் மண்டலம் – ராயலா நகர் 1வது குறுக்கு தெரு, மணலி மண்டலம் – எம்.ஆர்.பி. நகர், மாதவரம் மண்டலம் சி.எம்.டி.ஏ. கனரக வாகனம் நிறுத்துமிடம், அண்ணா நகர் மண்டலம் திருநகர் 20வது தெரு, அடையாறு மண்டலம் – காந்தி நகரிலுள்ள கெனால் பேங்க் சாலையில் நகர்ப்புற அடர்ந்த காடு மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய 4 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 விளையாட்டு திடல்கள்;

**மறுசீரமைக்கப்பட்ட சென்னை பள்ளிகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளி வளாகங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்பு திட்டங்களின் கீழ், தண்டையார் பேட்டை மண்டலம் – பட்டேல் நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளி, புதிய மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, திரு.வி.க. நகர் மண்டலம் – குக்ஸ் சாலை, ஜமாலியாவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, அண்ணா நகர் மண்டலம் – செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தேனாம்பேட்டை மண்டலம் – நுங்கம்பாக்கம் பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சென்னை ஆரம்ப பள்ளி, சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆழ்வார்பேட்டையில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி மற்றும் சென்னை ஆரம்ப பள்ளி, கோடம்பாக்கம் மண்டலம் – நெசப்பாக்கம் ஏரிக்கரை தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அடையாறு மண்டலம் – கோட்டூர் வளாகத்தில் சென்னை உயர்நிலை பள்ளி, சென்னை ஆரம்ப பள்ளி, மற்றும் புதிய கல்வி வளாகம், என 50 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட சென்னை பள்ளிகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளி வளாகங்கள்;

என மொத்தம் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 78 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவிலான 40 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் ரூ.278.97 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 2 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் ஈஞ்சம்பாக்கம் பகுதியில் சுமார் 33,760 மக்கள் பயன்பெறும் வகையில் 196 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் மற்றும் உத்தண்டி பகுதியில் சுமார் 9400 மக்கள் பயன்பெறும் வகையில் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள விரிவான பாதாள சாக்கடைத் திட்டம், என மொத்தம் 278 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள இரண்டு பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 53 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அலுவலக உதவியாளர், களப்பணியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 4 நபர்களுக்கும்;

நகராட்சி நிர்வாக இயக்ககத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த 68 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர் / வருவாய் உதவியாளர், அலுவலக உதவியாளர், பணி ஆய்வர், தொழில்நுட்ப உதவியாளர் ஆகிய பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு ஈவுத் தொகை வழங்குதல்!**

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையாக 18 கோடியே 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக ஈரோட்டிலிருந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா,

திருப்பூரிலிருந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், மாநகராட்சி மேயர் என்.தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி ஆணையர் பவன் குமார் ஜி.கிரியப்பனவர்,

திருச்சிராப்பள்ளியிலிருந்து மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஆர். வைத்தியநாதன்,

சேலத்திலிருந்து மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் ஆர். ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். கார்மேகம், மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர்,

திருப்பத்தூரிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, அ.நல்லதம்பி, மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள் - 'ஜனவரி 4'

ஜனவரி 4ஆம் நாள் திராவிட முன்னேற்ற கழக வரலாற்றிலும்....

தலைவர் தளபதியார் அவர்களின் அரசியல் வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியமான நாள்.

ஆம்... ஆறு ஆண்டுகள் முன்பாக... அதாவது 2017 ஜனவரி நான்காம் நாள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.கழக பொதுக்குழுவில்....

தி.மு.கழகத்தின் விதி எண் 18இல் திருத்தம் கொண்டு வரப்பட்டு....

தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் செயல் தலைவராக பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த உன்னதமான நாள்

இன்று...!!!

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு தி.மு.க. கோபாலபுரம் இளைஞர் அமைப்பு துவங்கி... திராவிட இயக்க மேடை நாடகங்கள்... மிசாவின் ஓராண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை... இளைஞரணியின் ஐந்து பொறுப்பாளர்களில் ஒருவர்... இளைஞரணிச் செயலாளர்.... எம் எல் ஏ... மேயர், எம் எல் ஏ... அமைச்சர்... துணை முதல்வர்.... கழக பொருளாளர்....

என்ற படிகளை எல்லாம்... ஓராண்டு ஈராண்டு... டீக்கேட் எனப்படும் பத்தாண்டுகள் என்றெல்லாம் இல்லாமல்....

ஐம்பது ஆண்டுகள் தொடர் ஓட்டத்தின் மூலம்... தமிழ்நாட்டின், மூளை முடுக்குகள்... இண்டு இடுக்குகள் என்று அத்தனை இடங்களிலும் தன் கால் தடங்கள் படாத இடங்களே இல்லை என்ற நிலையில் கழக கொடியை ஏந்தி... கழக கொடிகளை பல்லாயிரக்கணக்கில் ஏற்றி.... ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான கழக பொதுக்கூட்டங்களில் பேசிப் பேசி...



சௌமியன் வைத்தியநாதன்

இளைஞர்களிடையே உரையாடி உரையாடி.... உறவாடி, நட்பாகி, அண்ணனாகி.... கழகத்தை கலைஞருக்காக தன் தோள்களில் சுமந்து கொண்டு....

மீண்டும் சொல்கிறேன்... ஓராண்டு ஈராண்டல்ல... ஐம்பது ஆண்டுகள் உழைத்து உழைத்து உழைத்தே.... ஓடாகிப் போய்... தனது அறுபத்தி ஐந்தாவது வயதில் அவருக்கு கழக பொதுக்குழுவால்...

கழகத்தை இனி தோள்களில் அல்ல.... உன் தலைமேல் தூக்கி சுமந்து ஓடு ஓடு.... இழந்த வெற்றிகளையெல்லாம் ஈட்டிக் கொடு என்ற கட்டளையோடு, அவருக்கு அளிக்கப்பட்ட செயல் தலைவர் பொறுப்பு...!

கழகத்தின் உயிர்நாடியாம்... பொதுக்குழுவின் கட்டளைகளை ஏற்று...

குறுநில மன்னர்களை சற்றே விலகியிரும் பிள்ளாய் என்று சொல்லாமல் சொல்லி.... அடலேறுகளை பந்தயத்தில் ஓட விட்டு....

அடுத்த ஓராண்டில் அவர் கழக தலைவராக பொறுப்பேற்ற நிலையில்...

நடந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தான்,



கழக வரலாற்றில் முதல் முறையாக 53 சதவிகித வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி கிடைத்தது...

கிராம ஊராட்சி தேர்தல்களிலேயே கூட கழகம் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் பொழுது முதன் முறையாக 55 சதவிகித இடங்களை வென்றது...

சட்டமன்ற பொதுத்தேர்தலில் கால் நூற்றாண்டுக்குப் பிறகு மூன்று இலக்க தி.மு.கழக எம் எல் ஏக்களைப் பெற்று கழகம் ஆட்சிக்கட்டிலில் மீண்டும் அமர்ந்தது...

நகர்ப்புர உள்ளாட்சியில் 95 சதவிகித வெற்றிகளைப் பெற்றது...

இதோ இன்றைக்கும் தமிழக அரசியல் வரலாற்றில் ஸ்டாலின் Vs Others என்ற மிக மிக உச்சபட்ச அரசியல் ஆளுமைக்கான நிலையை அடைந்தது...

இன்றைக்கு கழகத்தை மக்கள் மன்றத்தின் உச்சத்தில் கொண்டு போய் வைத்திருக்கின்றார்..!

அவர் கட்டமைத்த கூட்டணி... அவரே சற்று தள்ளி நில்லுங்கள் என்றாலும் முடியவே முடியாது என்று அவரோடு கட்டுண்டு நிற்கின்றது...!

இரண்டரை ஆண்டு கால ஆட்சியில்.... ஒட்டுமொத்த தமிழ்நாட்டு கிராமப்புர மக்களும், பெண்களும், ஒடுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களும் அவர் தான் தங்கள் காப்பாளர் என்று அவரது கரங்களை இறுகப் பற்றி நடந்து செல்கின்றனர்...!

இதோ நாளைக்கே... தமிழ்நாட்டில் எந்த தேர்தல் வந்தாலும், அவர் தமிழ்நாட்டின் ஐம்பது சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் ஆதரவோடு வெற்றி பெறுவார்...!

அவருக்கு பணம் தேவையில்லை... புகழ் தேவையில்லை... பெரிய மனிதர்களின் உபசாரங்களும், அங்கீகாரங்களும் தேவையில்லை....

ஒடுக்கப்பட்ட.... ஒதுக்கப்பட்ட... உரிமைகள் மறுக்கப்பட்ட.... ஏற்றம்பெற வழியில்லாத... அடித்தட்டு மக்களின் வெற்றிக் கூக்குரல்களும் மகிழ்ச்சி ஆரவாரங்களும், கொண்டாட்டங்களும் மட்டுமே அவருக்கு தேவை...!

அதற்காகவே அவர் உழைத்துக் கொண்டிருக்கின்றார்... அவர்களும் அதை புரிந்து கொண்டிருக்கின்றார்கள்..!

வாழ்த்துக்கள் தலைவரே...
எங்களின் தளபதியாரே...!

## தமிழ்நாட்டில் வரும் நாட்களில்

# கனமழை: அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜன.6 - தமிழ்நாட்டில் கனமழை முதல் மிக கனமழை எச்சரிக்கை குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் அறிக்கை வருமாறு:

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் வளிமண்டல சுழற்சி நிலவுவதால் தமிழ்நாட்டில் கனமழை முதல் மிக கனமழைப் பொழிவு ஏற்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று (05.01.2024) பிற்பகல் 12.30 மணிக்கு வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனமழை எச்சரிக்கை - மாவட்டங்கள் வருமாறு

06.01.2024 : கனமழை - நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

07.01.2024: கனமழை முதல் மிக கனமழை - கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கனமழை - மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

08.01.2024 : திருவள்ளூர் மாவட்டத்தில் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

07.01.2024 அன்று சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும் ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.



கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், மீனவர்களுக்கு பின்வருமாறு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது:-

06.01.2024 மற்றும் 07.01.2024

தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை அடுத்துள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40-50 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

எனவே, மீனவர்கள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மீன் பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும், மேற்சொன்ன பகுதிகளுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## வேலூரில் - மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மாநாடு!

# 'புதிய சிந்தனையாளன்' பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழா!

## பேராசிரியர் மு.நாகநாதன் - தி.அ.முகமது சகி - ஆளூர் ஷா நவாஸ் - வாலாசா வல்லவன் சிறப்புரை!

வேலூர், ஜன.6 - மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி நடத்தும் 'புதிய சிந்தனையாளன்' பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழா மற்றும் தமிழ் தேசத்திற்குத் தன்னுரிமை, தன்னுரிமை மாநிலங்களின் கூட்டாட்சி மாநாடு வேலூரில் நடைபெறுகிறது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி நடத்தும் புதிய சிந்தனையாளன் பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழா மற்றும் தமிழ்த் தேசியத்திற்குத் தன்னுரிமை, தன்னுரிமை மாநிலங்களின் கூட்டாட்சி மாநாடு வேலூர், சத்துவாச்சாரி சோலை அரங்கத்தில் 7.1.2024 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை நடைபெறுகிறது.

புதிய சிந்தனையாளர் பொங்கல் மலர் 2024 வெளியீட்டு விழாவில் மு. சுவாமிநாதன் தலைமையில் மோ.சி.சங்கர் வரவேற்புரையில் தமிழ்நாடு அரசின் முன்னாள் திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர் மு. நாகநாதன் மலர் வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார். முதல் மலரை முன்னாள் எம்.பி. தி.அ.முகமது சகி பெற்றுக்கொள்கிறார்.

இந்நிகழ்வில் மு.சுகுமார், டாக்டர் தி.ச.முகமது சயி, இரா.முல்லை, வேலூர் பிலிப், மா.முருகேசன், க. குப்புசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் அன்று பிற்பகல் 5.30 முதல் 8.30 மணிவரை நடைபெறும் தமிழ்த் தேசத்திற்குத் தன்னுரிமை, தன்னுரிமை மாநிலங்களின் கூட்டாட்சி மாநாட்டில் தி.துரை சித்தார்த்தன் தலைமையில் நா.மதனகவி வரவேற்புரையில் பேராசிரியர் த.செயராமன், வி.சி.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ. ஆகியோர் கருத்துரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் புதிய சிந்தனையாளர் ஆசிரியரும் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளருமான வாலாசா வல்லவன், சா.குப்பன், முத்தமிழ், நா. செவ்வேள், இர.நடராசன், சி.நடராசன், இரா.திருநாவுக்கரசு, காஞ்சி அமுதன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

க.முகிலன் நிறைவுரையாற்ற மீ.டில்லிபாபு நன்றி கூறுகிறார்.

## 59 (அ) வட்டக் கழக துணைச் செயலாளர்

# எல்லீஸ் பாஸ்கர் மகன் ராஜபரத் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, ஜன.6- சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப்பகுதி, 59 அ வட்டக் கழகத் துணைச் செயலாளர் எல்லீஸ் எம்.பாஸ்கர் அவர்களின் இரண்டாவது மகனும், துறைமுகம் மேற்குப் பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் பி.ஆர்.ராஜ பரத் (வயது 31) திடீர் மாரடைப்பு ஏற்பட்டு ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 05.01.2024 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் மரணத்தைத் தழுவினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அவரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதிச்சடங்கு எல்லீஸ் புரம் எண் - 04 -B பிளாக் என்ற முகவரியில் இருந்து 06.01.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் திருவல்லிக்கேணி கிருஷ்ணாம்பேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

## நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு:

# 143-வது வட்டக் கழகக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் சி.சசிகுமார் அறிக்கை!

சென்னை, ஜன.6- மதுரவாயல் 143வது வட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (6.1.2024) மாலை 6 மணிக்கு, நொளம்பூர் ஸ்ரீராம் நகர் வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்று சிறப்பிக்கிறார்.

கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார்.

ஜி.மூர்த்தி, என்.மணிவண்ணன், கே.ஆறுமுகம், பி.தாட்சாயினி, பக்தவச்சலம், பி.உமாபதி, டி.நாகரத்தினம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுபோது கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி வட்டச் செயலாளர் சி.சசிகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நந்தனம் கி.மதி தலைமையில்

# மயிலை மேற்குப் பகுதி சார்பில் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன.6- சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு இன்று 06-01-2024, மாலை 6 மணியளவில் அன்பகத்தில் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி தலைமையில் அவை தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன், பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர்.எல்.வி. அசோக், ப.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில்

வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர். ராஜா, சுரேஷ் குமார், அ. நாகராஜன், மூ.இராஜேந்திரன், மு.இ.ஏழுமலை ஆகியோரின் வரவேற்பில்

சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை சட்டமன்ற உறுப்பினர் த.வேலு கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற குழு துணை தலைவர் கனிமொழி கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் யோகேஸ்வரி சுந்தரேசன் ஏற்பாட்டில் நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள சிறுமலர் செவித்திறன் குறையுடையோர் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். இதில் பகுதி செயலாளர் மா. பா.அன்பு துரை, மகளிர் அணி மாநில இணை செயலாளர் திருமதி குமரி விஜயகுமார், மாவட்ட நிர்வாகிகள் து. விக்டர், வி.எஸ்.கலை, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, சங்கீதா, லதா பிளாரன்ஸ், சுலோச்சனா ராமு, பச்சையம்மாள், வட்டச் செயலாளர் த. தேவராஜ், மற்றும் மாவட்ட மகளிர் அணி, தொண்டர் அணி, ,துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## செங்கோட்டை நகரக் கழகச் செயலாளர்

# வழக்கறிஞர் வெங்கடேசன் தந்தை ஆறுமுகம் மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் அஞ்சலி!



தென்காசி, ஜன.6- செங்கோட்டை நகர செயலாளர் வழக்கறிஞர் வெங்கடேசன் தந்தையார் எஸ்.கே.ஆறுமுகம் (வயது 81) நேற்று (5.01.2024) காலை 7.5 மணி அளவில் மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆ.ரவிசங்கர் திவான் ஒலி அழகு சுந்தரம் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, பொதுக்குழு உறுப்பினர் ரஹீம் ஷேக் தாவூது, பேபி ரஜப் பாத்திமா, கவுன்சிலர்கள் மணிகண்டன், இசக்கி, துறை குட்டி, ராஜா, முருகையா, இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, துணை அமைப்பாளர் சுப்பிரமணியன், நகர இளைஞரணி பீர்முகமது, பேரூர் கழகச் செயலாளர்கள் குற்றாலம் குட்டி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி, சேக்தாவூது, சேசுராஜன் மாவட்ட துணைச்செயலா ளர்கள் கென்னடி, கனிமொழி.

மாவட்ட பொருளாளர் செரீப், பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம் தமிழ்செல்வன் முன்னாள் மாவட்ட கழக பொறுப்பாளர் மா.செல்லத்துரை செங்கோட்டை ஒன்றிய கழக செயலாளரும் புதூர் பேரூராட்சி மன்ற தலைவருமான ரவிசங்கர், தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் வல்லம் திவான் ஒலி, ஆலங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன் தெற்கு ஒன்றிய செயலாளர் செல்லத்துரை, கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ், செங்கோட்டை சேர்மன் ராமலட்சுமி கடையநல்லூர் சேர்மன் மூப்பன் ஹபிபுர் ரகுமான் துணை சேர்மன் ஐவேந்திரன் தினேஷ், அரசு வழக்கறிஞர்கள் வேல்சாமி, மாரிகுட்டி, முத்துக்குமாரசாமி

மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இஞ்சி இஸ்மாயில், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கோமதிநாயகம்,முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் லிங்கராஜ் செங்கோட்டை நகர நிர்வாகிகள் அவைத்தலைவர் காளி, துணைச் செயலாளர் ராஜா, முத்துசரோஜா,நகர பொருளாளர் தில்லை நடராசன், மாவட்ட பிரதிநிதி கள் பீர்முகமது சுப்பிரமணி யன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ண ராஜா துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் பேச்சாளர்கள் ஆயிரப் பேரி முத்துசாமி, ஆயிரப்பேரி முத்துவேல், மேலகரம் ரமேஷ் பேரூர் கழக செயலாளர்கள் அச்சன்புதூர் வெள்ளத்துரை, புதூர் கோபால், இலஞ்சி முத்தையா, குற்றாலம் குட்டி (எ) சங்கர், கரிசல் வேலுச்சாமி, வடகரை கனியப்பா பண்பொழி ஜபருல்லா கடையநல்லூர் மணிகண்டன், காளிராஜ் மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி பெரிய பிள்ளை வலசை ஊராட்சி மன்ற தலைவர் வேலுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மு. தம்பையா**
**சனவரி 6 (2023)**



கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.

பகுதிப் பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்குப் பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024:

# டிரில்லியன் டாலர் கனவின் திசை!

## ‘இந்து தமிழ் திசை’ நாளேடு கட்டுரை




சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில், ஜனவரி 7, 8 ஆகிய தேதிகளில் ‘உலக முதலீட்டாளர் மாநாடு’ பிரம்மாண்ட அளவில் நடைபெற உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் கொண்ட பொருளாதாரமாகத் தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற உயரிய கொள்கையை நோக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறார். அதன் ஒருபகுதியாக இந்த மாநாடு அமைய உள்ளது. இந்த மாநாட்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான செயல் திட்டத்தை வெளியிட்டு முதலமைச்சர் பேச உள்ளார்.

தமிழ்நாடு அரசின் செயல் திட்டமாக உருவெடுத்துள்ள ஒரு டிரில்லியன் டாலர் கனவு, 2019இல் முதலில் அறிவிக்கப்பட்டது. அதற்கான பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு அரசு இத்தகைய முதலீட்டாளர் மாநாட்டினை நடத்துவதன் நோக்கம், பின்னணி, இத்தகைய மாநாடு கொண்டுவரும் உடனடி விளைவுகள், நீண்டகால விளைவுகள், சென்னை தாண்டி தென் மாவட்டங்களில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான முன்னெடுப்புகள் எனப் பல விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

**கிடைக்கப்போகும் பலன்கள்:** தமிழ்நாடு அரசு உலக நாடுகளிலிருந்து அந்நிய முதலீட்டைத் தமிழ்நாட்டுக்குள் கொண்டுவருவதற்கான ஒரு மிகப்பெரிய முன்னெடுப்பே உலக முதலீட்டாளர் மாநாடு. குறிப்பாக, அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் முதலீட்டாளர்களைக் அழைத்துவந்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான முயற்சியின் ஒரு பகுதி இது. உலக முதலீட்டாளர் மாநாட்டை வெறுமனே ‘முதலீடு’ என்கிற நோக்கில் மட்டும் பார்க்கக் கூடாது. அதை விரிவான கண்ணோட்டத்தில் பார்ப்பது அவசியம்.

உலக முதலீட்டாளர் மாநாட்டின் வழியே அந்நிய முதலீடுகள் அதிகரிக்கும். அதன்வழியே உள்ளூர் பொருளாதார வளர்ச்சி (Local Economic Growth) மேம்படும். குறிப்பாக, தமிழ்நாட்டின் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கு இது வழி வகுப்பதோடு, தனிநபர் வருமானத்தையும் (Per Capita Income) அதிகரிக்கும். தனிநபர் வருமானம் உயர வேண்டுமானால் வேலை வாய்ப்பு தேவை. அதை அடைவதற்கான பல்வேறு வேலைகளை அளிக்கக்கூடிய நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அதிகரிக்க வேண்டும். அதற்கு இந்த உலக முதலீட்டாளர் மாநாடு பெரிய அளவில் உதவும். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம். தமிழ்நாட்டுக்குள் முதலீடுகள் வரும்போது, இயல்பாக உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படும். போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், சாலை, குடிநீர் உள்ளிட்டவை இன்னும் பரலாக, அதிகமாகக் கிடைக்கும்.

தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முன்னோடியாக விளங்கி வருகிறது. உதாரணத்துக்கு மின்சார வாகனங்கள், உலகளாவிய திறன் மையங்கள் (GCC - Global Capability Center), குறைகடத்திகள் (Semiconductors), மின்னணுச் சாதனங்கள் தயாரிப்பு, உணவுப் பதப்படுத்துதல், காலணித் தயாரிப்பு, ஆடை உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் அறிவுசார் பொருளாதாரம் (IT Knowledge economy), விண்வெளி (Aerospace), மூலதனப் பொருள்கள் (Capital Goods) உள்ளிட்ட துறைகளில் அளப்பரிய வளர்ச்சியைக் கண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. இந்தத் துறையில் அடைந்துள்ள மேம்பாடுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தெரிவிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் உலக முதலீட்டாளர் மாநாடு அமையும்.

**முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பு:** கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய பல்வேறு முதலீடுகள் அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. அவற்றை மீட்டெடுப்பதன் ஒரு பகுதியாகவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையிலும்,

உலக முதலீட்டாளர் மாநாடு அமையும். இம்மாநாட்டில் அறிவிக்கப்படவிருக்கும் கொள்கை சார்ந்த பல்வேறு முடிவுகள், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அமையும்.

உலக முதலீட்டாளர் மாநாட்டைப் பெரிய அளவில் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதால், இம்மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் மட்டுமின்றி, நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெரும் தொழில்முனைவோர், அறிவியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பல்வேறு நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், தொழில்முனைவில் ஆர்வம் காட்டும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்பார்கள். இவ்வாறு, ஓரிடத்தில் பல்வேறு ஆளுமைகளைக் கண்டு, உரையாடுவதற்கான ஒரு மிகப் பெரிய களமாகவும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு இருக்கும்.

**வளம் சேர்க்கும் வளம்:** அது மட்டுமின்றி, தமிழ்நாட்டில் உள்ள பிரபல பிராண்டு களுக்குச் சர்வதேச அளவிலான கவனத்தை ஈர்க்கும் வகையில் இம்மாநாடு அமையும். அடுத்து, மாநாட்டில் பங்கெடுக்கும் முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்குப் பல்வேறு கேள்விகள், சந்தேகங்கள் இருக்கும். தமிழ்நாடுதான் தொழில் தொடங்குவதற்கான பல்வேறு சாத்தியங்களைக் கொண்டுள்ள மாநிலம். தொழிற்சாலைகளுக்கான இடம், சாலை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்டவை முன்னுரிமை அடிப்படையில் கிடைப்பது மட்டுமின்றி, அமைதியான (Social & Industrial Peace) சூழல் கொண்ட மாநிலமும் தமிழ்நாடுதான். இது குறித்துப் பலருக்கும் தெரியும். இதையும் தாண்டிப் பல்வேறு கேள்விகளுக்கான பதிலைப் பெறுகிற இடமாகவும் முதலீட்டாளர் மாநாடு அமையும்.

இறுதியாக, தமிழ்நாட்டில் இருக்கும் முக்கியமான வளங்களில் ஒன்று மனிதவளம். கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடுதான். முனைவர் பட்டம் முடித்த மாணவர்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம். அவர்கள் அதிக அளவிலான காப்புரிமையை (Patent) பதிவுசெய்துள்ளனர். இவ்வகையான மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் வகையிலும் உலக முதலீட்டாளர் மாநாடு அமையும் என்பதுதான் இதன் சிறப்பம்சம்.

**நன்றி: இந்து தமிழ்திசை**
**5.1.2024**

---

மேற்கு வங்க முதல்வர் - செல்வி மம்தா பானர்ஜி பிறந்த நாள்!

## “மக்களாட்சியின் மலர்ச்சிக்குப் பணியாற்றிடுவீர்!”

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜன. 6-

மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களின் பிறந்த நாளை யொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தியில்,

"இந்தியாவில் மக்களாட்சியின் மலர்ச்சிக்குப் பணியாற்றிடுவீர்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**மேற்கு வங்க முதலமைச்சரும் எனது அன்பிற்கினிய சகோதரியுமான செல்வி மம்தா பானர்ஜி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**நல்ல உடல்நலனும், மகிழ்ச்சியும், வெற்றிப்படிகளும் நிறைந்து, இந்தியாவில் மக்களாட்சியின் மலர்ச்சிக்குப் பங்காற்றிடும் வகையில் இந்த ஆண்டு தங்களுக்கு அமைந்திட விழைகிறேன்.**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (05.01.2024) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 121 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியதைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மீதமுள்ள 111 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை பட்டினப்பாக்கம், எம்.ஆர்.சி.நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கு: திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு! ஆர்.எஸ்.பாரதி தலைமை!

## கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜன. 6 - கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நமது நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் ஜனவரி 10 மாலை 3 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் நாடாளு மன்ற உறுப்பினர் திருச்சி சிவா “சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்” எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 10 புதன் கிழமை அன்று மாலை 5 மணி அளவில் ராயப்பேட்டை ஒய் எம் சி ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணி தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி.,

வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி. ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதி இளம்சுருதி எம்.சி., முத்துவேல்.ராமசாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபு வின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூவாளூர் சின்னதுரை
### சனவரி 6 (2014)



**தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவர், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவர், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.**

**திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.**

**1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘இந்தியா’ கூட்டணி வெற்றி! வரலாற்றுக் கட்டாயமாகும்!!

31.12.2023ஆம் தேதியிட்ட ஆங்கில இந்து ஏட்டின் 27ஆம் பக்கத்தில் வர்கீஸ் கே.ஜார்ஜ் என்ற பத்திரிக்கையாளர் ஒரு முக்கியமான செய்திக் குறிப்பை வழங்கியுள்ளார். ‘இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேர்தல்கள் நடைபெறவுள்ள இந்த ஆண்டு எப்படியிருக்கும்? என்ற கேள்விக்குறியோடு, பழமையானதும் மிகப்பெரியதுமான ஜனநாயக நாடுகளின் தேர்தல்கள் என்பதால் உலக நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வத்தோடும், அக்கறையோடும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்’ என்ற தலைப்பிட்டு வெளியிட்டுள்ளார்கள் (How is the poll year shaping up for India, U.S? why will the world watch elections in the largest and oldest democracies with interest and concern)

செய்தியாளர் வர்கீஸ் கே.ஜார்ஜ், உலக மக்களின் மத்தியில், இந்த இரண்டு நாட்டு தேர்தல்கள் கவனத்தையும், ஆர்வத்தையும் பெரிதும் ஈர்ப்பதற்கான காரணத்தையும் விவரிக்கிறார்.

இந்தியாவும் அமெரிக்காவும் உலக நாடுகளின் ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அமல்படுத்தி வருகின்ற மிகப்பெரியதும், பழமையானதுமான நாடுகளாகும்! அமெரிக்க நாட்டின் ஜனநாயகத்தில் “ஜனாதிபதிஆட்சிமுறை” ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாறாக இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயக முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு, தொடர்ந்து அமல்படுத்தப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியின் அரசியல் அதிகாரம் தனித்துவம் வாய்ந்தது, அந்த நாட்டின் மக்கள்பிரதிநிதித்துவ மன்றங்களான மக்கள் பிரதிநிதித்துவசபை (House of Representatives of the People) மற்றும் மேல்சபை (Senate) ஆகிய மன்றங்களின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவியலாது. ஆனால் இந்திய ஒன்றியத்தில், நாடாளுமன்றத்தின் எண்ணிக்கை பலத்தால் பிரதம அமைச்சரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவும் முடியும், பிரதமரை அப்புறப்படுத்தவும் முடியும் என்ற விவரங்களையெல்லாம் செய்தியாளர் விளக்கியுள்ளார்.



**பொன். முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர் -
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

பாரதீய ஜனதாக்கட்சியின் பலம் எந்தெந்த மாநிலங்களில் உள்ளது என்றும் எந்தெந்த மாநிலங்களில் பலவீனமாக உள்ளது என்பதையும் விளக்கிவிட்டு, பாரதீய ஜனதாக் கட்சின் ஆழமான எதிர்புணர்விற்கு அச்சாணியாக கருதப்படுவது எதுவென செய்தியாளர் குறிப்பிடுவது, கல்வி, பொதுச்சுகாதாரம், இந்துமத நடைமுறைகள் ஆகும். இந்தத் துறைகள்சார்ந்த அதிகாரங்களை மத்தியில் உள்ள ஒன்றிய அரசின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவரும் முயற்சியும் அதனையொட்டிய தொடர் நடவடிக்கைகளும் ஆகுமெனக் குறிப்பிடுகிறார். (Several states in India find the BJP policies with regard to education, health, and the role of the Hindu religion disturbingly centralising)

செய்தியாளர் குறிப்பிடும் கல்வி, பொதுச்சுகாதாரம் ஆகிய துறை சார்ந்த அதிகாரங்களைக் கைப்பற்றும் முயற்சியில் ஒன்றிய அரசு தொடர்ந்து பல்வேறு முரட்டுத்தனமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மக்கள் நேரடியாகவே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதன் தாக்கத்தையும், விளைவுகளையும் எதிர்கொண்டும் வருகிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் (Preamble of the constitution) மதச்சார்பற்ற ஆட்சிமுறையை (Secularism) வலியுறுத்துகிறது. ஆனால் இன்றுள்ள பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சி இந்துமதக் கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்து ராஷ்ட்ரத்தை” உருவாக்கத் திட்டமிட்டு, தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே மதச்சார்பற்ற ஆட்சிமுறை தான் இந்தியாவிற்கு பொருத்தமான ஆட்சிமுறை என்பதோடு, கடந்த 73 ஆண்டுகாலமாக இந்த மதச்சார்பற்ற ஆட்சிமுறைதான் நாட்டு மக்களின் அமைதியையும், ஒற்றுமையையும் உறுதிப்படுத்தியிருக்கிறது என்பதை நிதர்சனமாகப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள், “இந்து ராஷ்ட்ரா” மதவாதக்கட்டமைப்பை நிச்சயமாக மக்கள், நாட்டின் பன்முகத்தன்மை கருதி ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிஞ்சிற்றும் இருக்கவியலாது.

இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், இங்கு வாழும் மக்களின் வாழ்வியல் முறைக்கும் மதச்சார்பற்ற ஆட்சிமுறையே ஆகச்சிறந்தஆட்சிமுறையாக இருக்க வேண்டுமென்று தான் இந்திய நாட்டின் ஒற்றுமையில் அக்கறை கொண்ட அகில இந்திய அளவிலான அனைத்துத்தரப்பு மக்களும் கருதுகிறார்கள். “இந்து ராஷ்ட்ரத்தாலே”, மக்களின் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்யவியலாது, மாறாக, பெரும்பான்மைசிறுபான்மை என்ற பெரும் பிளவுகளை மக்களிடையே உருவாக்கும். “சமூக நீதி” (Social Justice) என்ற கோட்பாட்டால் மட்டும்தான் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிளவையும் சமன் செய்ய முடியும், ஏற்றத்தாழ்வு என்கிற நிலை சமுகபொருளாதாரஅரசியல் களங்களில் சமன்படுத்தப்பட்டு, “சகோதரத்துவம்” தழைத்தோங்கிட வழிவகுக்கும்.

எனவேதான் தமிழ் நாட்டில், திராவிடமாடல் ஆட்சியினைத் திறம்பட செயல்படுத்திக்கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர் “சமுக நீதி” என்ற கோட்பாட்டின் ஆக்கப்பூர்வமான பயன்களை, இந்தியா (INDIA) கூட்டணியின் மூலம் அனைத்து மக்களின் மனங்களில் ஆழமாக பதிய வைத்து வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல பன்முகத்தன்மை கொண்ட இந்திய நாட்டின் ஒற்றுமையை பலப்படுத்தி நிரந்தரப்படுத்தும் சக்தியும் ஆற்றலும், சமுக நீதிக்கு உண்டா அல்லது இந்துத்துவக் கோட்பாட்டிற்கு உண்டா என்றால், எந்த ஒரு இந்தியக் குடிமகனும் வேறுபாடுகளை மறந்து விட்டு சமூக நீதியைத்தான் தேர்ந்தெடுப்பான் என்ற நிலை அகில இந்தியா முழுமையும் உள்ள மக்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளால் அறிய முடிகிறது.

அதுமட்டுமல்ல அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய “சமூகநீதிக் கோட்பாட்டின் முன்னர், வரும் நாடாளுமன்றத்தேர்தல் களத்தில் இந்துத்துவக் கோட்பாடு” மக்கள் மத்தியில் சிக்கிச் சிதறுண்டு போகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அனைத்து மக்களின் ஒற்றுமையே இந்திய நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றும் என்பதை நாட்டு மக்களும் உணரத் தொடங்கி விட்டனர்.

இந்திய ஒன்றிய ஆட்சிமுறையில் நாடாளுமன்றத்தில் உள்ள எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில் தான் பிரதம அமைச்சர் தன் பதவியில் தொடர முடியும். எனவே இந்திய ஒன்றியத்தில் நாடாளுமன்றமே அதிகார மையமாகக் கருதப்படும். இத்தகைய நிலைமை அமெரிக்காவில் இல்லை. அங்கு ஜனாதிபதி பொறுப்பு என்பது மக்கள் பிரதிநிதித்துவ சபைகளின் எண்ணிக்கை பலத்தைப் பொறுத்து மாறக்கூடியது அல்ல. உச்சபட்ச அதிகாரத்தை அரசியல் சட்ட அடிப்படையில் பெற்ற நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள், படிப்படியாக பிரதமரின் கரங்களுக்கு மாறுவதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகவே தொடங்கி விட்டன. (In India, PM’s control over Parliament has grown in the recent past with the BJP winning absolute majorities in 2014 and 2019)

இந்த வெளிப்பாட்டின் ஒரு கட்டமாகத்தான் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்துவிட்டு, மிக முக்கியமான இந்திய நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சட்டங்களை, எந்தவிதமான விவாதங்களுமின்றி நிறைவேற்றி இருக்கிறார்கள். இந்த முறை ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதித்துவ மன்றமான நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும், உரிமையையும், ஆட்சிக்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி ஆக்கிரமித்துக் கொண்டதாகத்தான் கருத முடியும். அதுமட்டுமல்ல நாடாளுமன்ற ஜனநாயகத்தை மாற்றி ஜனாதிபதி ஆட்சிமுறையை (Presidential form of Government) கொண்டுவருவதற்கான வெள்ளோட்டமாகத்தான் இந்த நடவடிக்கையை அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான், 2024ஆம் ஆண்டு, இந்திய ஒன்றியத்திற்கான நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. இந்தத் தேர்தலில் “இந்தியா” (INDIA) தேர்தல் கூட்டணித் தலைவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் டாக்டர். பாபா சாகிப் அம்பேத்கரும் மற்றும் பல தேசியத் தலைவர்களும், சட்ட வல்லுநர்களும் தீர்க்கமாகச் சிந்தித்து உருவாக்கி வழங்கியுள்ள நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பெரும் முயற்சியில் ஈடுபடவுள்ளார்கள். இந்திய அரசியல் சட்டமே மக்களால் உருவாக்கப்பட்ட சட்டம் தான் என்பது அரசியல் சட்டத்தின் முகவுரையிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், “இந்தியா” (INDIA) தேர்தல் கூட்டணி வெற்றிபெற்றே தீரவேண்டும் என்ற திடமான எண்ணமும் சிந்தனையும் மக்கள் மத்தியில் வேகமாகவே உருவாகிக் கொண்டிருக்கிறது.

இந்திய நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் “இந்துத்துவக் கோட்பாட்டை” அறவே அப்புறப்படுத்திவிட்டு சமூக நீதிக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்தி இந்திய நாட்டின் பன்முகத் தன்மையையும், ஒற்றுமையையும் காப்பாற்றுவதன் மூலம் பன்முகத்தன்மை கொண்ட, பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய வரலாற்று ஆசிரியர்களால் துணைக் கண்டமென வரையறுக்கப்பட்ட இந்தியாவில், ஜனநாயகம், மதச்சார்பற்ற கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும், “சமூக நீதி” என்கின்ற திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை அம்சமான அனைத்து மக்களையும் அன்போடு அரவணைத்துச் செல்லும் அறவழிக் கோட்பாட்டின் வழியிலும், மதவாத சக்திகளையும், அதிகாரங்களை ஒன்றுதிரட்டி, ஓரிடத்தில் குவித்து ஜனநாயகத்தில் ஓர் சர்வாதிகாரத்தை உருவாக்கும் திட்டத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியை அப்புறப்படுத்திவிட்டு, இந்திய அரசியல் சட்டத்தையும், இந்திய நாட்டின் ஒற்றுமையையும் உறுதிப்படுத்தி ஜனநாயக நாடாளுமன்ற ஆட்சிமுறையைப் பாதுகாக்க தீர்க்கமான கொள்கைகளுடன் மக்களைச் சந்திக்கும் ‘இந்தியா’ கூட்டணி தடைகளைத் தகர்த்து, நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியினை ஈட்டும் என்பதில் ஐயமில்லை.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.01.2024) சென்னை, சைதாப்பேட்டையில் நடைபெற்ற ”மக்களுடன் முதல்வர் குறை கேட்கும் முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் அனைத்துத்துறை உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியத்தில்

## 1100 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரண உதவி!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கும்மிடிப்பூண்டி, ஜன.6-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம், புதுப்பாளையம், காரணி மற்றும் பாலவாக்கம் ஊராட்சிகளில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார்.

புதுபாளையம் ஊராட்சியில் 242 குடும்பங்களுக்கும் காரணி ஊராட்சியில் ;275 குடும்பங்களுக்கும், கல்லூர் ஊராட்சிகியல் 269 குடும்பங்களுக்கும், பாலவாக்கம் ஊராட்சியில் 301குடும்பங்களுக்கும் ஆக 1100 குடும்பங்களுக்கு 5கிலோ அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் இ.ஏ.பி. சிவாஜி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.வி. ஆனந்தகுமார். மு. மணிபாலன், பி.முத்து, எம். ஆர்.ஸ்ரீதர், டி.ஜெ.ஜி.தமிழரசன், ஜெ.சுரேஷ்குமார், கே.இ.திருமலை, என்.எஸ். மூர்த்தி, வெங்கடேசன், வ.புருஷோத்தமன், கே.வி. நமசிவாயம், இ.பிரபு, எஸ். ராமஜெயம், கே.பரத்குமார், கே.இ.ராஜேஷ், மு.வேதாச்சலம், ஜெயராமன், ஜெயசந்திரன், கே.வி.நாகராஜ், கே.வி.ரவி, சுரேஷ், இ. கோதண்டன், புதுப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் கௌசல்யா, காரணி ஊராட்சிமன்ற தலவர் ஜெகநாதன், விவசாய அணி தேவராஜ், பி.கே.பாபு, ஜடராயன், ஏலியம்பேடு பாலா, உங்கள் நண்பன் கஜேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தியாகராயர் நகர்

## கிழக்கு - மேற்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை அறிவிப்பு!

சென்னை, ஜன.6-

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி, மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தியாகராயர் நகர் கிழக்கு-மேற்குப் பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (06.01.2024-சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் எண்.87, உஸ்மான் சாலையில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதுபோது இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு, தைத்திருநாள், கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### வெள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில்

## ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய சுகாதார ஆய்வக கட்டிடம்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜன.6-

பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளியூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டார பொது ஆய்வக கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவிற்கு ஒன்றிய செயலாளர் புஜ்ஜி (எ) ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். இதில் ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், துணைத் தலைவர் பர்க்கத்துல்லா கான், சுகாரரப் பணிகள் துணை இயக்குனர் டாக்டர் ஜவஹர்லால், ஒன்றிய கவுன்சிலர் வேலு, வர்த்தக அணி துணை அமைப்பாளர் முரளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் பூந்தமல்லி எம் எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆய்வக கட்டிடத்திற்கான அடிக்கல் நட்டு தொடங்கி வைத்தார்.

இந்த ஆய்வகத்தில் டெங்கு, மலேரியா, இரத்தப் பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை மற்றும் கிராம குடிநீர் மாதிரி சோதனை, கர்ப்பிணி பெண்களுக்கான ரத்தப் பரிசோதனை போன்ற பணிகள் இங்கு நடைபெறுகிறது.

இதில் ஊராட்சி மன்ற தலைவர் பப்பி முனுசாமி, ஒன்றிய நிர்வாகிகள் மனோகரன், பிராங்க்ளின், வேலு, ரப்பி பாய், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கபிலன், ஜஸ்டின்பால், கருணாகரன், அரிகிருஷ்ணன், பலராமன், தகவல் தொழில் நுட்ப பிரிவு அஜித்குமார், துர்காதேவி, வெள்ளியூர் நிர்வாகிகள் தரசதன், கன்னியப்பன், கஜேந்திரன், சதீஷ், பி.நாகராஜ், ஜெயாம்மாள், வெங்கட்ராமன், ஸ்ரீதர், வட்டார மருத்துவர் சுபாஷ் சந்திரபோஸ், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் மோகன், சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் நேர்முக உதவியாளர் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நெல்லை புகாரி**
**சனவரி 6 (1999)**



கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.

கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

“சிறுபான்மையினரான இசுலாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்” என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 18 கோடியே 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹைதீன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வி. அப்துல் வஹாப், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முகமது அபுபக்கர், தமிழ்நாடு வக்ஃப் போர்டு தலைவர் எம். அப்துல் ரகுமான், இளைஞர் அணி தலைவர் முனவர் அலி, மாணவர் அணி தேசிய தலைவர் முகமது அர்சத் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

## 6.74கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# செஞ்சியில் - அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர் கே .என். நேரு திறந்து வைத்தார்!

செஞ்சி, ஜன. 6-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி அன்னை அஞ்சுகம் அம்மாள்பேருந்துநிலையத்தை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 கோடியே74லட்சம்ரூபாய் மதிப்பீட்டில்புனரமைக்கப்பட்டு அதிநவீன புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்றதலைவர்மொக்தியார் அலி மஸ்தான்அனைவரையும்வரவேற்றார்.பேரூராட்சிகளில் இயக்குனர் கிரண் குராலாதிட்டஅறிக்கையை வாசித்தார்.

சிறுபான்மையினர்நலன் மற்றும்வெளிநாடுவாழ்தமிழர்கள்நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில்நகராட்சிநிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு6கோடியே74லட்சம்ரூபாய்மதிப்பீட்டில்கட்டப்பட்ட அதிநவீன அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தினைமக்கள்பயன்பாட்டிற்கு திறந்து வைத்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலை ஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்துநடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில்:

நகராட்சிநிர்வாகத்துறை சார்பில் நாளை முதல்வர் காணொலி மூலம் ரூ 1933 கோடி மதிப்பிலான கட்டிடங்களை திறந்துவைக்கிறார். மேலும் நகராட்சி நிர்வாக துறைக்கு முதல்வர் ரூ 24 ஆயிரம் கோடி ஒதுக்கி உள்ளார்.

பேரூராட்சி நிர்வாகத்திற்காக ரூ 5 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் 490 பேரூராட்சிகளில்31பேரூராட்சிகளில் புதிய கட்டிடங்கள் கட்ட ரூ80கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

51பேரூராட்சிகளில்வார சந்தை அமைக்க ரூ 110.82 கோடி நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

13 பேரூராட்சிகளில் ரூ 20.44 கோடி மதிப்பீட்டில் அறிவு சார் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் குடிநீருக்கு பத்தாயிரம் கோடி ஒதுக்கீடு செய்தனர்.

முதலமைச்சராக தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து பொதுமக்களுக்குபாதுகாப்பான குடிநீர் வழங்கிட 3 ஆண்டுகளில்ரூ30கோடிநிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அந்த வகையில் செஞ்சி பேரூராட்சிகளில்பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு கடந்த 2.1/2 ஆண்டுகளில் ரூ 53.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி நகர்புறங்களில்45சதவீதமக்கள் வாழ்ந்துவந்தனர் தற்போது இது 60 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும் சென்னை தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நகராட்சி துறை சார்பில் செய்த பணிகள் அளப்பறியாதது எனதெரிவித்த அமைச்சர் கே.என். நேரு தமிழ்நாடுமுதலமைச்சர்தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி துறைக்கு தரும் ஊக்கம்தான்அனைத்து பணிகளையும் செய்ய முடிந்ததுஎன அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமைச்சர் செஞ்சிமஸ்தான் பேசுகையில்:

நான் முதல் முறையாக 1986ம் ஆண்டு பேரூராட்சி தலைவராகப்பெறுப்பேற்ற போதுநகரில்குடிப்பதற்கும் தண்ணீர்இல்லாதநகரமாக இருந்தது. திமுக ஆட்சியில் திருக்கோவிலூார் தென் பெண்ணைஆற்றில்54கி.மீ., தூரத்தில் இருந்து 6 கோடி ரூபாய் மதிப்பில் செஞ்சி-அனந்தபுரம்கூட்டுகுடிநீர்திட்டம்கொண்டுவரப்பட்டது. முதல்வர் ஸ்டாலின்துணை முதல்வராக இருந்த போது செஞ்சிக்கு எனதனி குடிநீர் திட்டம் அறிவித்து ரூ16 கோடி ஒதுக்கி எல்லோருக்கும் குடிநீர் வழங்கினார். இப்போது அமைச்சர் நேரு ரூ33கோடிஒதுக்கிஅனைத்து வீடுகளுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

செஞ்சியில் சக்கராபுரம் பழைய காலனி, புதிய காலனி,சிறுகடம்பூர்காலனியில் சமுதாய கூடம் கட்டவும், செஞ்சியில் அறிவுசார் மையம் அமைக்கவும், செஞ்சிகோட்டைஆஞ்சநேயர் கோவிலுக்கு செல்லும் சாலையை தார் சாலையாக அமைக்கவும்,மேல்களவாய் ரோட்டில் சங்கராபரணி ஆற்றில்மேம்பாலம்கட்டுவதற்கு ஏதுவாக பேரூராட்சியிடம் உள்ள 1600 மீட்டர் சாலையை நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைக்கவும்அமைச்சர்கே.என்.நேரு அனுமதிஅளிக்கவேண்டும். இதை செஞ்சி நகர மக்கள் சார்பாக கேட்டு கொள்கிறேன் என்றார்.

இதைத் தொடர்ந்து செஞ்சி பேருந்து நிலை யத்திலிருந்துமூன்றுவழித்தடங்களில் புதிய பேருந்து சேவையை அமைச்சர் கே என்நேரு,அமைச்சர்செஞ்சி மஸ்தான் ஆகியோர் கொடியசைத்துதொடங்கிவைத்தனர்.

நிகழ்ச்சியில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆரணிநாடாளுமன்றஉறுப்பினர் டாக்டர் விஷ்ணு பிரசாத், பேரூராட்சிகளின்கண்காணிப்பு பொறியாளர் திருமாவளவன், பேரூராட்சிகளின் கடலூர் மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர் வெங்கடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சேது நாதன், செந்தமிழ் செல்வன், சீத்தாபதிசொக்கலிங்கம், மாநில விவசாய அணி இணை செயலாளர் அன்னியூர் சிவா,

மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய பெருந்தலைவர்கள்செஞ்சிவிஜயகுமார், மேல்மலையனூர்கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதாரவிக்குமார்,மரக்காணம் தயாளன் ஒலக்கூர் சொக்க லிங்கம் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன்,மாவட்டஅவைத்தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், துணைச் செயலாளர் ரவிக்குமார், பொதுக்குழுஉறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், சாந்தி ஏழுமலை, துணை சேர்மன்கள் ஜெயபாலன், பழனி,விஜயலட்சுமி முருகன், ராஜலட்சுமி செயல்மணி,ஒன்றிய செயலாளர்கள்நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன்,

சாந்தி சுப்ரமணி யன், நாராயணமூர்த்தி, துரை , இளம்வழுதி, மணிமாறன்,செழியன், ரவிச்சந்திரன்,ராஜாராமன்,நகரசெயலாளர் கண்ணன் ,பேருசெயலாளர்கள்கார்த்திக், சம்பத்உள்ளிட்ட துறை சார்ந்தஅலுவலர்கள்தி.மு.க. நிர்வாகிகள்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார் நன்றி கூறினார்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மிக்ஜாம் புயல் கனமழையினால் இறந்த நபர்களின் குடும்பத்தினருக்கு ரூ. 5 லட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், ஒன்றியச் செயலாளர் சந்தானம், நகர மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## அடிடாஸ் நிறுவனத்தின்

# உலகளாவிய திறன் மேம்பாட்டு மையம் !

## சென்னையில் அமைகிறது !

சென்னை, ஜன. 6-

பிரசித்தி பெற்ற அடிடாஸ் நிறுவனம் தனது உலகளாவிய திறன் மேம்பாட்டு மையத்தை தமிழ்நாட்டில் அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அடிடாஸ் நிறுவனம், ஆடை, காலணி உள்ளிட்டவற்றை தயாரித்து உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்த நிறுவனத்தின் தலைமையகம் பவேரியாவில் உள்ளது.

இந்நிலையில், அடிடாஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தனது நிறுவனத்தின் உலகளாவிய திறன் மேம்பாட்டு மையத்தை தமிழ்நாட்டில் அமைக்க உள்ள தாகவும், சீனாவுக்கு வெளியே ஆசியாவில் அமையும் முதல் மையம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் அமையும் இந்த மையத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக அனில் கபூர் நியமிக்கப்படுவதாகவும் அடிடாஸ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்ச்சுக்கல், சீனா, கொலம்பியா மற்றும் வட அமெரிக்கா நாடுகளில் உள்ள தனது உற்பத்தி, கொள்முதல், விற்பனை உள்ளிட்ட நடவடிக்கைகளை சென்னையில் அமைய உள்ள உலகளாவிய திறன் மேம்பாட்டு மையம் கையாளும் என்றும் அடிடாஸ் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சிறப்பான மனிதவளம், மென்பொருள் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பல பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதன் அடையாளமாகவே அடிடாஸ் நிறுவனத்தின் அறிவிப்பு கருதப்படுகிறது.




பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு–38க்குட்பட்ட பட்டேல் நகர் சென்னை தொடக்கப் பள்ளியில் நேற்று (05.01.2024) நடைபெற்று வரும் ”மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமினை மேயர் திருமதி ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உடன்பிறப்பே... 39

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த வி.எம்.தேவராஜ் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## வி.எம்.தேவராஜ்: படை முகத்துப் பெருவீரன்!



ஓவியம் : ரவி பேலட்

கோட்டை நகரமாம் வேலூரரை சிப்பாய்க் கலகப் புரட்சியின் மையமாக வரலாறு குறித்து வைத்துள்ளது. அதேபோல சுதந்திரத்துக்குப் பிந்தைய ஜனநாயக ஆட்சியில், வேலூர் மண்டலம் 'தி.மு.கழகத்தின் கோட்டை' என்பதையும் வரலாறு எழுதுகிறது.

தமிழ்நாட்டில் முதன்முதலில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் அண்ணா தொடங்கி வைத்த போர்முழக்கம் 'இன்று வேலூர் கோட்டை, நாளை செயின்ட் ஜார்ஜ் கோட்டை' என்றுதான். அந்தப் பொதுக்கூட்டம், வேலூர் கோட்டை மைதானத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் முழக்கத்தை கர்ஜனை செய்த வேலூர் கழகச் சிப்பாய்களில் ஒருவர் வி.எம். தேவராஜ். கலைஞரின் சொற்களிலேயே சொல்வதெனில் 'படை முகத்துப் பெருவீரன்' வி.எம்.தேவராஜ்.

### தோழமையான அணுகுமுறை

வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை என்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, 'சாரதியையும் தேவராஜனையும் கேளுங்கள்' என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டினார். சற்றேறக்குறைய பேரறிஞர் அண்ணா பிறந்து 11 ஆண்டுகளுக்குப் பின்னால், 1920 ஆம் ஆண்டு ஜூன் 7 ஆம் தேதி பிறந்தவர். எனினும், அண்ணாவுக்கும், தேவராஜ் அவர்களுக்கும் தோழமையான அணுகுமுறை நிலவியதை காலம் குறித்து வைத்திருக்கிறது.

தொடக்கக் கால பள்ளிக்கல்வியுடன் திராவிட இயக்கத்தின் அரசியலும் சேர்ந்து கொண்டதால், தேவராஜ் வேலூர் வட்டாரத்தில் திராவிடக் கொள்கைகளைப் பேசும் தளபதியாக அறியப்படலானார். தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்றுப் பெரும் படை திரண்ட போது, அதில் வேலூரின் முகமாக சாரதியும் தேவராஜூம் இருந்தனர். கழகத்தவரை அரவணைப்பதில் சாரதியிடம் ஒரு பண்பு என்றால், அவரைப் போலவே தேவராஜூம் வேலூர் கழகத்தில் அன்பு பாராட்டியவர். ஆஜானுபாகுவான தோற்றம் என்றாலும் அமைதி, எளிமை, நிதானமான அணுகுமுறையே அவரின் அடையாளம் என வேலூர் கழகத்தினர் நினைவு கூர்கின்றனர். பேரறிஞர் அண்ணா தேவராஜை சுருக்கமாகத் 'தேவ் ! தேவ் !' என்று அழைப்பார் என்கிறார்கள். கிட்டத்தட்ட வேலூர் சுற்றுவட்டாரங்களில் கழக உடன்பிறப்புகளாலும், வேலூர் மக்களாலும் 'தேவ்' என்று அவர் அழைக்கப்பட்டார்.

### தி.மு.க.வின் கோட்டை

தி.மு.க.வின் கோட்டையாக இருந்த வேலூரில் இருந்து தொடர்ச்சியாக சாரதி வெற்றி பெற்றார் என்றால், அவருக்குப் பின்னர் தேவராஜ் அந்த செல்வாக்கைத் தக்க வைத்தவராகத் திகழ்ந்தார். சுமார் 36 ஆண்டுகள் வேலூர் நகர்மன்ற உறுப்பினராக தேவராஜ் இருந்தார். தவிர, சாரதிக்குப் பின்னர் நகர மன்றத் தலைவராகவும் ஒருமுறை செயல்பட்டவர்.

இவர் நகர மன்றத் தலைவராக இருந்தபோது, 'நகர மன்ற அலுவலகத்தில் அவர் இருக்கிறாரா இல்லையா என்பதை அவரது குடை சொல்லிவிடும்' என்பார்கள். எளிமையாக ஆட்டோவில் தான் வருவார்.சமயங்களில் மக்களோடு மக்களாகக் கையில் குடை பிடித்துக் கொண்டு சாதாரணமாக நடந்து செல்வதைப் பார்க்கலாம். அந்தக் குடையை அலுவலக வாசலில் மாட்டிவிட்டு அவர் வேலை பார்த்துக் கொண்டிருப்பார். அந்தக் குடை அங்கு இருந்தால், மக்கள் கூட்டமும் குறைகளுடன் அங்கு குழுமிவிடும்.

நகர மன்றத் தலைவர் பொறுப்புக்குப் பின்னர், 1980, 1984, 1989 ஆம் ஆண்டுகளில் வேலூர் கோட்டையில் இருந்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குத் தேர்வாகி வந்து கலைஞரின் கரங்களை வலுப்படுத்தியவர் தேவராஜ்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையை ஏற்றதும், கழகத்தைக் கட்டுக்கோப்பாக வைக்கவும் தேவராஜ் போன்றவர்கள் கடைசிவரை கலைஞருக்குத் துணை நின்றனர். 1972 ஆம் ஆண்டில் கழகம் உட்கட்சி நெருக்கடியைச் சந்தித்தபோது தேவராஜன் 'சாய்ந்து' விடுவார் என்று ஒரு பரபரப்பு கிளப்பப்பட்டது.

### எம்.ஜி.ஆருடன் சிலம்பம்

அதற்குக் காரணம், தேவராஜ் சிலம்பம் ஆடுபவர். வேலூரில் கழக நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆர். வந்தால், அவரை வைத்து ஒரு சிலம்ப நிகழ்ச்சியைக் காலையிலேயே கழகத் தொண்டர்கள் நடத்துவார்கள். அப்போது எம்.ஜி.ஆர். உடன் சிலம்பம் சுற்றுபவராக தேவராஜ் இருந்தார். அதனால் எம்.ஜி.ஆருக்கு நெருக்கம் என்று பேச்சு கிளப்பப்பட்டது. ஆனால், 'நான் கழகத்தின் விசுவாசி, அண்ணாவின் தம்பி, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு' எனக் கலங்காமல் கழகம் காத்தவர் தேவராஜ். அவரது கழகப் பிடிப்பினைப் போற்றும் வகையில் அவர் எம்.எல்.ஏ. ஆவதற்கு முன்னர், சட்டமேலவை உறுப்பினராக்கிப் பெருமை சேர்த்தார், முத்தமிழறிஞர் கலைஞர்.

**கொள்கைப் பிடிப்போடு யார் யார் இருக்கிறார்கள் என கழகத்தினர் சோதித்துக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அந்த நாட்களிலும் தேவராஜ் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவராக இருந்தார்.**

நெருக்கடி கால மிசா கொடுமையேற்று ஓராண்டு சிறையில் அடைப்பட்டிருந்தார். அவர் மற்றும் அவருடன் அடைக்கப்பட்டு இருந்த கழகத் தோழர்கள் ஐந்து பேர் திடீரென கடலூருக்கு மாற்றப்பட்டனர். கடலூர் சிறையில் கழகத்தின் புரட்சி முழக்கம் கிளம்பியதும் மீண்டும் வேலூருக்கே மாற்றப்பட்டார். விலைவாசி உயர்வுப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் எனக் கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களிலும் இந்த வேலூர் சிங்கம் முதல் ஆளாக முன் நின்றதை, இன்றைக்கும் வேலூர் கழக நிர்வாகிகள் கழக உணர்வுடன் நினைவுகூர்கின்றனர்.

### உட்கட்சி குழப்பம்

1993 ஆம் ஆண்டில் மீண்டும் கழகத்தில் உட்கட்சிக் குழப்பம் நீடித்த போதும் தேவராஜ் பெயர் அடிபட்டது. அப்போது யார் பெயர்தான் அடிபடவில்லை? கொள்கைப் பிடிப்போடு யார் யார் இருக்கிறார்கள் என கழகத்தினர் சோதித்துக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அந்த நாட்களிலும் தேவராஜ் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவராக இருந்தார்.

கழகத்தின் பல்வேறு படிநிலைகளில் பொறுப்பு வகித்த தேவராஜ் அவர்கள் வேலூர் மாவட்ட அவைத் தலைவராகவும் கழகத்தை வழி நடத்தினார். வயது மூப்பின் காரணமாக 1998 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 11 ஆம் தேதி இந்த வேலூர் சிங்கம் தனது இறுதி சுவாசத்தை நிறுத்திக் கொண்டது.

### வேலூர் வேங்கை

வேதனை நிரம்ப, அப்போது கலைஞர் ஒரு கடிதம் எழுதினார். "வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை என்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, சாரதியையும், தேவராஜனையும் கேளுங்கள்" என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டிய அந்த நாள் முதல் வி.எம்.தேவராஜை அறிவேன். 'அந்தப் படைமுகத்துப் பெருவீரன்' பங்கேற்காத அறப்போர்க்களம் எதுவுமில்லை. அந்த வேலூர் வேங்கை விடைபெற்றுக் கொண்டதை எண்ணி விழிநீர் பெருக்காதார் அந்த வட்டாரத்தில் யாருமில்லை" என்று அந்த இரங்கல் உரையில், தனது விழி நீரையும் இறக்கி வைத்தார் கலைஞர்.

வேலூர் கோட்டை இன்றைக்கும் கழகக் கோட்டைதான். அரசியல் அறிந்தோர் யாரும் அதை மறுக்க முடியாது. அப்படியான கழகக் கோட்டையின் அடிச் செங்கல்லாக தேவராஜ் போன்றோர் திகழ்ந்ததையும் கழகத்தினர் மறக்க முடியாது.

...துடிக்கும்

## புத்தகக் காட்சியில் அறநிலையத்துறை!



'திராவிட மாடல்' ஆட்சியில் கோயில் சொத்துகளை மீட்டெடுத்தல், குடமுழுக்கு நடத்துதல், கோயில்களைப் புனரமைத்தல், அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குதல், அன்னைத் தமிழில் அர்ச்சனை என இந்து சமய அறநிலையத்துறை தினம் தினம் புதுப்புது வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 அரிய பக்தி நூல்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு, கடந்த ஆண்டு ஜனவரி 19 ஆம் தேதி முதலமைச்சர் வெளியிட்டார். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் புத்தக விற்பனை நிலையமும் திறக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு சென்னை புத்தகக் காட்சியிலும் இந்து சமய அறநிலையத்துறை தனி அரங்கம் அமைத்து, 'தேவாரம்', 'திருவாசகம்', 'திருப்புகழ்', 'திருப்பாவை', 'திருவெம்பாவை', 'அபிராமி அந்தாதி', 'நாலாயிர திவ்யபிரபந்தம்', 'தமிழகக் கலைகள்', 'சைவமும் தமிழும்', 'இந்தியக் கட்டடக் கலை வரலாறு', 'அவ்வையார் வரலாறு', 'பதினெண் புராணங்கள்', 'சிற்பக் கலை நூல்கள்' உள்ளிட்ட 108 அரிய நூல்களை விற்பனைக்கு வைத்துள்ளது. அரங்கின் வடிவமைப்பும் நூல்களும் புத்தகக் காட்சிக்கு வரும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

## :ப்ளாஷ்பேக்





கோவி.லெனின்

### சந்திப்புக்காக இதழ்!

2004 ஆம் ஆண்டு ஜனவரியில், புத்தாண்டை முன்னிட்டு 'தமிழ் அணு' என்று தலைப்பிட்ட 16 பக்க குறுஇதழை 'துளி தீ போதும் இருள் எரிக்க' என்ற அடைமொழியுடன் வெளியிட்டேன். அந்த முயற்சியைப் பாராட்டி முத்தமிழறிஞர் கலைஞர் 'முரசொலி' உடன்பிறப்புக் கடிதத்தில் என் பெயரையும் குறு இதழையும் குறிப்பிட்டு அரைப் பக்கத்துக்கு எழுதி இருந்தார். நன்றி தெரிவிப்பதற்காக 'முரசொலி' அலுவலகத்தில் தலைவர் கலைஞரைச் சந்தித்தேன். ஏற்கெனவே, 1996 ஆம் ஆண்டு அவருடைய அணிந்துரையுடன் வெளியாகியிருந்தது என் முதல் கவிதை நூல். அதனை நினைவுபடுத்தி அவரிடம் வழங்கினேன். மாதந்தோறும் 'தமிழ் அணு' குறுஇதழ் அச்சானதும் கலைஞரை நேரில் சந்தித்து வழங்குவேன். அவர் அன்புடன் உரையாடுவார். அதற்காகவே, அவ்விதழை நடத்திய நினைவுகள் இன்றைக்கும் மனதை விட்டு அகலாதவை.

**-கோவி.லெனின், தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகள்!

**1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி சேலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கலைஞர், அதிசயிக்கத் தக்க வகையில், ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த வீரபாண்டி ஆறுமுகம், கலைஞரின் அன்றைய சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார். இறுதியாக செவ்வாப்பேட்டைப் பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய நாள் முழுவதும் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகளில் கிடைத்த, 15 ஆயிரம் ரூபாயை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 351




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131